
ஏழ்மையும், அறியாமையும் கனவுகளை
அழித்துவிட அனுமதியோம்...
UNIT - 8
தமிழ்நாட்டின் வரலாறு,
மரபு, பண்பாடு மற்றும்
சமூக அரசியல் இயக்கங்கள்
TNPSC - GROUP I, II, II A
திண்ணை
பயிற்சிப் பட்டறை, தேனி
9940970325
Thinnai Theni
Thinnai Competitive Exam
thinnnaimail@gmail.com

ஏழ்மையும் அறியாமையும் கனவுகளை அழித்துவிடஅனுமதியோம்...

# திண்ணை

பயிற்சிப் பட்டறை, தேனி

வழங்கும்

# தமிழ்நாட்டின் வரலாறு, மரபு, பண்பாடு மற்றும் சமூக அரசியல் இயக்கங்கள்



திண்ணை பயிற்சி பட்டறை, 57A, ஜவகர் மெயின்ரோடு, NRT நகர், தேனி

9940970325 Thinnai Competitive Exam Thinnai Theni thinnaimail@gmail.com

Thinnai Study Circle 9361482208

# திண்ணை உறுதிமொழி

இரக்கமும் கருணையும் இருகண்களாகட்டும்!
இதழ்கள் இரண்டிலும் புன்னகை மலரட்டும்!
உழைப்பும், உறுதியும் இருதோள்களாகட்டும்!
நேர்மை ஒன்றையே நெஞ்சம் தாங்கட்டும்!
இடதும் வலதும் இணைந்த கரங்களாகட்டும்!
இதயம் என்றும் அன்பால் துடிக்கட்டும்!
தடைகளைத் தாண்டி கால்கள் ஓடட்டும்!
கொட்டும் வியர்வையே மூலதனமாகட்டும்!
சாதி மதம் பேதம் ஒழிப்போம்!
பதவி பணம் தரும் கர்வம் தவிர்ப்போம்!
லட்சியம் விதைத்து வெற்றியை அடைந்து!
லஞ்சம் தவிர்த்து நெஞ்சை நிமிர்த்து!
அறத்தின் வழி நின்று மனிதம் போற்று!

| S. No | பொருளடக்கம் | Page No |
|---|---|---|
| 01 | தமிழ் சமுதாய வரலாறு அது தொடர்பான தொல்லியல் கண்டுபிடிப்புகள் | 3 |
| 02 | சங்க காலம் முதல் இக்காலம் வரையிலான தமிழ் இலக்கிய வரலாறு | 23 |
| | 2.1 சங்கம் மருவிய காலம் | 48 |
| | 2.2 காப்பியங்கள் | 56 |
| | 2.3 சமய இலக்கியங்கள் | 69 |
| | 2.4 வைணவமும் தமிழும் | 87 |
| | 2.5 பௌத்தமும் தமிழும் | 95 |
| | 2.6 சமணமும் தமிழும் | 96 |
| | 2.7 இஸ்லாமும் தமிழும் | 97 |
| | 2.8 கிறித்தவமும் தமிழும் மேனாட்டுக் கிறித்தவர்கள் | 98 |
| | 2.9 சிற்றிலக்கியங்கள் | 101 |
| | 2.10 பிற்காலப் புலவர்கள் | 112 |
| | 2.11 இக்கால இலக்கியம் | 114 |
| | 2.12 புதுக்கவிதை | 120 |
| | 2.13 திரையிசைப் பாடல்கள் | 123 |
| | 2.14 குழந்தை இலக்கியம் | 126 |
| | 2.15 உரையாசிரியர்கள் | 128 |
| | 2.16 பிற்காலத் தமிழ் அறிஞர்கள் | 130 |
| | 2.17 பல்கலைக்கழகங்கள் - மாநாடுகள் - விருதுகள் | 136 |
| | 2.18 விருதுகள் | 137 |
| | 2.19 அடைமொழியால் குறிக்கப்பெறும் ஆசிரியர்கள் | 138 |
| | 2.20 புகழ்பெற்ற நூல்/நூலாசிரியர்கள் | 141 |
| | 2.21 அடைமொழியால் குறிக்கப்பெறும் நூல்கள் | 146 |
| 03 | திருக்குறள் | 149 |

| | | |
|---|---|---|
| 04 | ஆங்கிலேயருக்கு எதிரான தொடக்க கால கிளர்ச்சிகள் | 180 |
| | 4.1 பாளையக்காரர்களின் புரட்சி (1755 - 1801) | 181 |
| | 4.2 தென்னிந்தியக் கிளர்ச்சி (1801) | 189 |
| | 4.3 வேலூர் புரட்சி | 191 |
| 05 | விடுதலைப் போராட்டத்தில் தமிழ்நாட்டின் பங்கு | 196 |
| | 5.1 சுதேசி இயக்கம் | 200 |
| | 5.2 அரசின் அடக்குமுறை நடவடிக்கைகள் | 208 |
| | 5.3 சட்ட மறுப்பு இயக்கம் | 212 |
| 06 | விடுதலைப் போராட்டத்தில் பெண்களின் பங்கு | 215 |
| 07 | பத்தொன்பது மற்றும் இருபதாம் நூற்றாண்டுகளில் தமிழ்நாட்டின் சமூக அரசியல் இயக்கங்களின் பரிணாம வளர்ச்சி | 225 |
| | 7.1 தமிழ் மறுமலர்ச்சி | 230 |
| | 7.2 தமிழ்நாட்டின் அரசியல் மாற்றங்கள் | 234 |
| | 7.3 தமிழ்நாட்டின் தொழிலாளர் இயக்கங்கள் | 235 |
| 08 | நீதிக்கட்சி, பகுத்தறிவு வாதத்தின் வளர்ச்சி சுயமரியாதை இயக்கம் | 237 |
| | 8.1 தென்னிந்திய நல உரிமைச்சங்கம் (நீதிக்கட்சி) | 238 |
| | 8.2 சுயமரியாதை இயக்கம் | 241 |
| 09 | திராவிட இயக்கம் மற்றுதம் இவ்வியக்கங்களுக்கான அடிப்படைக் கொள்கைகள் | 244 |
| | 9.1 தி.மு.க ஆட்சியில் தமிழகம் | 244 |
| | 9.2 அ.இ.அ.தி.மு.க ஆட்சியில் தமிழகம் | 251 |
| 10 | தந்தை பெரியார் மற்றும் பேரறிஞர் அண்ணாவின் பங்களிப்புகள் | 257 |
| | 10.1 பெரியார் ஈ.வெ.ரா | 257 |
| | 10.2 சி.என். அண்ணாதுரை | 259 |

# சங்க காலம்

## சங்க கால இலக்கியங்கள்

- எட்டுத்தொகை
- பத்துப்பாட்டு

**எட்டுத்தொகை**

**"நற்றிணை நல்ல குறுந்தொகை ஐங்குறுநூறு**
**ஒத்த பதிற்றுப்பத்து ஓங்கு பரிபாடல்**
**கற்றறிந்தோர் ஏத்தும் கலியோடு அகம் புறம்**
**என்று இத்திறந்த எட்டுத்தொகை"**

1. **நற்றிணை**
2. **குறுந்தொகை**
3. **ஐங்குறுநூறு**
4. **பதிற்றுப்பத்து**
5. **பரிபாடல்**
6. **கலித்தொகை**
7. **அகநானூறு**
8. **புறநானூறு**

- தமிழுக்கே உரிய இலக்கியங்கள்: **சங்க இலக்கியம், அற இலக்கியம், பக்தி இலக்கியம்.**
- வச்சிரணந்தியின் சங்கத்தில் தொகுக்கப்பட்டதால் சங்க இலக்கியம் எனப் பெயர்பெற்றது என்பர் சிலர்.
- திணை இலக்கியம் எனப்படுவது சங்க இலக்கியம்.
- **அகப்பாடல்கள் அனைத்தும் பாத்திரக் கூற்றுகள்.**
- **புறப்பாடல்கள் அனைத்தும் புலவர் கூற்றுகள்.**
- உள்ளுறை, இறைச்சி நிறைந்த இலக்கியம் சங்க இலக்கியம்.
- சங்க இலக்கியத்திற்குப் பதினெண் மேற்கணக்கு என்ற பெயரும் உண்டு.
- சங்க நூல்கள் /இலக்கியங்கள் என்று முதலில் சொன்னவர் களவியல் உரையாசிரியர் நக்கீரர்.

# எட்டுத்தொகை

- எட்டுத்தொகையுள் **அக நூல்கள்** ஐந்து: **நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, கலித்தொகை, அகநானூறு**
- எட்டுத்தொகையுள் **புறநூல்கள்** இரண்டு: **பதிற்றுப்பத்து, புறநானூறு**
- எட்டுத்தொகையுள் **அகமும், புறமும்** கலந்த நூல் ஒன்று: **பரிபாடல்**
- எட்டுத்தொகையுள் **பாடலால் பெயர்பெற்ற நூல்** இரண்டு: **கலித்தொகை(கலிப்பா), பரிபாடல்(பரிபாட்டு)**
- எட்டுத்தொகையுள் **காலத்தால் முந்தியது புறநானூறு**
- எட்டுத்தொகையுள் **காலத்தால் பிந்திய நூல்கள் கலித்தொகையும், பரிபாடலும்** ஆகும்.

**வேறுபெயர்கள்**

- அகநானூறு – *அகம், அகப்பாட்டு, நெடுந்தொகை*
- புறநானூறு – *புறம், புறப்பாட்டு, புறம்பு நானூறு*

## நற்றிணை

- அகநூல்
- 400 பாடல்களைக் கொண்டது.
- பாடிய புலவர்களின் எண்ணிக்கை 175(187)
- **சிற்றெல்லை 9 அடி, பேரெல்லை 12 அடி**
- தொகுத்தவர் பெயர் தெரியவில்லை.
- **தொகுப்பித்தவர் பன்னாடு தந்த பாண்டியன் மாறன் வழுதி.**
- கடவுள் வாழ்த்துப் பாடியவர் **பாரதம் பாடிய பெருந்தேவனார்.**
- நற்றிணைக் கடவுள் வாழ்த்துத் **திருமாலைப்** பற்றியது.
- பாடலின் தொடரால் பெயர்பெற்ற புலவர்கள் - தனிமகனார், தேய்புரிப் பழங்கயிற்றியனார், விழிக்கண் பேதை பெருங்கண்ணகனார்.

**செய்திகள்**

- வணிகர்களுக்குக் கொடுக்கும் பட்டம் காவிதி, எட்டி
- தொண்டி - சேரநாட்டுத் துறைமுகம்<br>கொற்கை - பாண்டிய நாட்டுத் துறைமுகம்<br>மாந்தை - சேரநாட்டுக் கடற்கரை ஊர்<br>மருகூர்ப்பட்டினம் - பாண்டிய நாட்டுக் கடற்கரை நகரம்
- மருத்துவன் அறவோன் எனப்பட்டான்.
- கணியன் என்பதற்குச் சோதிடன் என்று பொருள்.
- இந்நூலுக்கு முதலில் உரை எழுதியவர் பின்னத்தூர் நாராயணசாமி ஐயர்.

## குறுந்தொகை

- அகநூல்
- 400 பாடல்கள்
- 203 புலவர்கள்
- **சிற்றெல்லை 4 அடி முதல் பேரெல்லை 8 அடி 307,399 ஆம் பாடல்கள் மட்டும் ஒன்பது அடி**
- தொகுத்தவர் **பூரிக்கோ**
- தொகுப்பித்தவன் பெயர் தெரியவில்லை
- **கடவுள் வாழ்த்துப் பாடியவர் பாரதம் பாடிய பெருந்தேவனார்**
- குறுந்தொகையில் கடவுள் வாழ்த்து **முருகனைப்** பற்றியது.
- பாடல் தொடரால் பெயர் பெற்றவர்கள் **அணிலாடு முன்றிலார், காக்கை பாடினியார், குப்பைக் கோழியார், விட்ட குதிரையார், மீனெறி தூண்டிலார்.**
- முதன் முதலில் பதிப்பித்தவர் **சி.வை.தாமோதரம் பிள்ளை.**
- ஆராய்ச்சிப் பதிப்பு **உ.வே.சாமிநாதையர்**
- பின்னால் வந்த உரையாசிரியர்கள் இந்நூலிருந்தே மிகுதியான பாடல்களை மேற்கோள் காட்டியுள்ளனர்.
- பேராசிரியர் முதல் 380 பாடல்களுக்கும், நச்சினார்க்கினியர் இறுதி 20 பாடல்களுக்கும் உரை எழுதினார் என்பர். அவை இன்று கிடைக்கவில்லை.

**செய்திகள்**

- **படைத்தலைவருள் சிறந்தவருக்குக் கொடுக்கும் பட்டம் ஏனாதி.**
- நாணயங்களைப் பரிசோதிக்கும் அரசாங்க அலுவலன் **வண்ணக்கன்** எனப்பட்டான்.
- அரசாங்க உள்படு காமத்தலைவன் **வள்ளுவன்** எனப்பட்டான்.

- **நன்னன்** என்பவன் **பெண்கொலை** புரிந்த மன்னன்.
- அகுதை(அ.ஃ.தை) என்பவன் ஒரு சிற்றரசன்.
- அதியமானின் தலைநகரம் **தகடூர்(தருமபுரி). தகடூர் யாத்திரை என்ற ஓர் நூல் இருந்தது. அது இன்று முழுமையாகக் கிடைக்கவில்லை.**
- கொல்லிமலைத் தலைவன் வல்வில் ஓரி.
- இம்மலையில் இருந்த **பாவை, கொல்லிப்பாவை** எனப்பட்டது.
- பறம்புமலைத் தலைவன் **பாரி.**
- திரக்கோவலூாரையும் முள்ளூரையும் ஆண்டவன் மலையமான் திருமுடிக்காரி.
- கரிகாலனுக்குத் திருமாவளவன் என்ற பெயரும் உண்டு
- கரிகாலன் மகள் ஆதிமந்தி
- ஆதிமந்தியின் காதலன் ஆட்டனத்தி
- ஆட்டனத்தி ஒரு சேர மன்னன்
- யாய் என்றால் என்தாய் என்று பொருள்
  ஞாய் என்றால் உன்தாய் என்று பொருள்
  தாய் என்றால் அவன்தாய் என்று பொருள்
- எந்தை என்றால் எம் தந்தை என்று பொருள்
  நுந்தை என்றால் உம் தந்தை என்று பொருள்
  தந்தை என்றால் அவர்கள் தந்தை என்று பொருள்
- அவ்வை என்றால் எம் அக்காள் என்று பொருள்
  நுவ்வை என்றால் உம் அக்காள் என்று பொருள்
  தவ்வை என்றால் அவர்கள் அக்காள் என்று பொருள்
- குழல், அளகம், கொண்டை, பனிச்சை, துஞ்சை என்பன மகளிரின் ஐவகைக் கூந்தல் ஒப்பனை
- ஓரி, குஞ்சி, குடுமி என்பன ஆணின் தலைமுடி
- விழாக்காலங்களில் பெண்கள் ஆடும் கூத்து துணங்கை
- சூலத்தை ஏந்தி உள்ள பெண் தெய்வம் சூலி
- உயிரையும் உடலையும் பிரிப்பவன் கூற்றுவன், இவனுக்கு கூற்று, கூற்றம் என்ற பெயர்களும் உண்டு.
- கூற்றுவனுக்கு இணையாக வடமொழிச் சொல் எமன் என்பது பொருள்
- முதுகண் என்பதற்கு முக்கிய ஆதாரம் என்று பொருள்
- கட்டி என்பவரின் நாட்டுக்கு அப்பால் வடுகர் வாழ்ந்தனர்(இம் மரபினர் கட்டித்தேவன், கட்டியத்தேவன் எனப் பிற்காலச் சோழர் ஆட்சியில் சிற்றரசராய் இருந்த தெலுங்கர்கள் ஆவர்).

## ஐங்குறுநூறு

- அகநூல்
- 500 பாடல்கள்
- சிற்றெல்லை 3 அடி முதல் பேரெல்லை 6 அடி வரை
- திணைக்கு நூறு பாடல்கள்
- ஒவ்வொரு திணையும் பத்துப்பத்தாகப் பிரிக்கப்பட்டுள்ளது.
- ஒவ்வொரு பத்தும் பாடலின் பொருள் அல்லது பயின்றுவரும் சொல்லால் பெயர் பெறுகிறது.
- *பாடிய புலவர்கள் ஐந்துபேர்*
  மருதம் - ஓரம் போகியார்
  நெய்தல் - அம்மூவனார்
  குறிஞ்சி - கபிலர்

பாலை - ஓதலாந்தையார்
முல்லை - பேயனார்

- தொகுத்தவர் புலத்துறை முற்றிய கூடலூர்க்கிழார்
- தொகுப்பித்தவன் யானைக் கட்சேய் மாந்தரஞ் சேரல் இரும்பொறை
- கடவுள் வாழ்த்துப் பாடியவர் பாரதம் பாடிய பெருந்தேவனார்
- ஐங்குறுநூற்றின் கடவுள் வாழ்த்து சிவனைப் பற்றியது
- இந்நூலை முதன் முதலாகப் பதிப்பித்தவர் உ.வே.சாமிநாதையர்

**செய்திகள்**

- அம்மூவனார் இயற்றிய நெய்தல் திணையில் இடம்பெற்றுள்ள தொண்டிப்பத்து அந்தாதி முறையில் அமைந்துள்ளது.
- சங்க இலக்கியத்துள் அந்தாதி முறையில் அமைந்தவை இரண்டு 1.தொண்டிப்பத்து 2.பதிற்றுப்பத்தில் உள்ள நான்காம் பத்து.
- அந்தாதித் தொடையைத் தொல்காப்பியர் கூறவில்லை.
- சங்க இலக்கியத்துள் உள்ளுறையும் இறைச்சியும் மிகுதியாக இடம் பெற்றுள்ள நூல் ஐங்குறுநூறு.
- ஆதன் அவினி என்பவன் ஒரு சேர மன்னன்.
- மத்தி என்பவன் கிழார் என்னும் ஊருக்குத் தலைவன்
- ஊரினும் பெரியது பேரூர்
  ஊரினும் சிறியது சிற்றூர்
  பழமையான ஊர் மூதூர்
  கட்டப்பட்ட ஊர் கட்டூர்(பாசறை)
- பாசறை என்பது அரசர்களும் அமைச்சர்களும் போர்புரியத் தங்கியிருக்கும் இடம்
- பாடி என்பது படைத்தலைவர்களும் வீரர்களும் தங்கி இருக்கும் இடம்
- பாசறை, பாடிவீடு, கட்டூர் மூன்றும் ஒன்றே என்பாரும் உண்டு
- தைத் திங்களில் இளமகளிர் குளத்தில் நீராடி நோன்பு இருப்பர்.
- நூறாயிரம்(லட்சம்) என்ற எண்ணுப் பெயருக்கு மேலாகத் தாமரை, வெள்ளம், ஆம்பல் என்னும் பேரெண்களும் இருந்தன. ஐங்குறு நூற்றில் குறிக்கப்படும் பேரெண் வெள்ளம்.
- நடுநாட் கங்குல் என்பது நள்ளிரவு
- சங்க கால மக்கள் பகல் 12 மணியிலிருந்து நாளைக் கணக்கிட்டனர்.
- பாண்டில் என்பது கால் நிறுத்திய பெரிய விளக்கு.
- வண்டல் பாவை என்பது மண்ணைக் கொண்டு சிறுமியர் செய்யும் பொம்மை
- குரவை என்பது பெண்கள் ஏழு அல்லது ஒன்பது பேர் கைக்கோர்த்து ஆடும் ஆட்டம்.
- பஞ்சுரம் என்பது பாலைப் பண்ணைக் குறிக்கும்.
- எழுத்துடை நடுகல் என்பது போரில் இறந்த வீரனுக்காக எடுக்கப்பட்ட, அவன் பெயரும் புகழும் எழுதிய நடுகல்.
- ஆண்களுக்கு வலக்கண் துடித்தால் நல்லது
- பெண்களுக்கு இடக்கண் துடித்தால் நல்லது
- இந்திராவிழா குறித்துக் கூறும் தொகை நூல் ஐங்குறுநூறு.

**பதிற்றுப்பத்து**

- பத்து +பத்து = பத்து +இன் +இற்று+பத்து = பதிற்றுப்பத்து
- இன், இற்று சாரியைகள்

- பத்து + பத்து சேர்ந்தால் பதிற்றுப்பத்து ஆகும் என்று தொல்காப்பியம் வெளிப்படையாகக் கூறவில்லை. நன்னூல் கூறுகிறது.
- சேர அரசர்கள் பத்துப் பேரை 10 புலவர்கள் தலா பத்துப்பாடல்கள் வீதம் பாடிய 100 பாடல்களின் தொகையே பதிற்றுப்பத்து.
- முதல் பத்தும் இறுதிப்பத்தும் கிடைக்கவில்லை.
- இப்போது எட்டுப் பத்தில் உள்ள 80 பாடல்கள் கிடைத்துள்ளன.
- முதலில் பதிப்பித்தவர் உ.வே.சாமிநாதையர்
- உரை எழுதியவர் சு.துரைசாமிபிள்ளை

**2-ம் பத்து**

- பாட்டுடைத்தலைவன் - இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன்
- பாடியவர் - குமட்டூர்க் கண்ணனார்.
- பெற்ற பரிசு – உம்பற்காட்டில் 500 ஊர்கள், தென்னாட்டு வருவாயில் 38 ஆண்டு பாகமும் கொடுத்தான்.

**3-ம் பத்து**

- பாட்டுடைத்தலைவன் - பல்யானைச் செல்கெழு குட்டுவன்
- பாடியவர் - பாலைக் கௌதமனார்
- பரிசு – 10 பெரும் கேள்விகள் செய்து புலவரையும் அவர் மனைவியையும் துறக்கம் புகுவித்தான்.

**4-ம் பத்து**

- பாட்டுடைத்தலைவன் - களங்காய்க் கண்ணி நார் முடிச்சேரல்
- பாடியவர் - காப்பியாற்றுக் காப்பியனார்
- பரிசு – 40 நூறாயிறம் பொன்னும் நாட்டின் ஒரு பகுதியும்.

**5-ம் பத்து**

- பாட்டுடைத்தலைவன் - கடற்பிறக்கோட்டிய செங்குட்டுவன்
- புலவர் - பரணர்
- பரிசு – உம்பற் காட்டு வருவாயும் தன் மகன் குட்டுவன் சேரலையும் கொடுத்தான்.

**6-ம் பத்து**

- பாட்டுடைத்தலைவன் - ஆடுகோட்பாட்டுச் சேரலாதன்
- புலவர் - காக்கை பாடினியார்
- பரிசு – ஒன்பது காப்பொன்னும் நூறாயிரம் பொற்காசும் கொடுத்தான்.

**7-ம் பத்து**

- பாட்டுடைத்தலைவன் - செல்வக் கடுங்கோ வாழியாதன்
- புலவர் - கபிலர்
- பரிசு – நன்றா என்ற குன்றின்மேல் நின்று தன் கண்ணில் கண்ட நாடு எல்லாம் கொடுத்தான்.

**8-ம் பத்து**

- பாட்டுடைத்தலைவன் - தகடூர் எறிந்த பெருஞ்சேரல் இரும்பொறை
- புலவர் - அரிசில் கிழார்
- பரிசு – ஒன்பது நூறாயிரம் பொற்காசும் அரசுகட்டிலும் கொடுத்தான்

**9-ம் பத்து**

- பாட்டுடைத்தலைவன் - இளம் சேரல் இரும்பொறை
- புலவர் - பெருங்குன்றூர்க்கிழார்
- பரிசு – 32 ஆயிரம் பொற்காசும், மனையும் பல கலன்களும் கொடுத்தான்.
- பதிற்றுப்பத்து இரு அரசகுடும்பத்தினரைப் பற்றிய நூல்.

- உதயஞ்சேரல் வழிவந்தோர் பற்றி 2-6 ஆம் பத்துகள் கூறுகின்றன.
- அந்துவஞ்சேரல் இரும்பொறை வழிவந்தோர் பற்றி 7-9ஆம் பத்துகள் கூறுகின்றன.
- உதியஞ்சேரலுக்கு உரிய முதல் பத்தும் யானைக்கட்சேய் மாந்தரஞ்செரல் இரும்பொறைக்குரிய 10ஆம் பத்தும் கிடைக்கவில்லை.
- ஒவ்வொரு பத்தின் ஈற்றிலும் பதிகம் உள்ளது. இதில் மன்னவன் பெயர் - செய்த போர் - கொடைத்திறன் - பாடிய புலவர் - பெற்ற பரிசு ஆகியன உள்ளன.
- பதிகங்கள் பிற்கால மெய்கீர்த்திகள் போல உள்ளன.
- ஒவ்வொரு பாட்டும் அதில் வரும் சிறந்த தொடரால் பெயர் பெறுகிறது.
- சங்க நூல்களில் அனைத்துப் பாடலும் பாடல் தொடரால் பெயர் பெற்ற நூல் பதிற்றுப்பத்து மட்டுமே ஆகும்.
- ஒவ்வொரு பாட்டின் ஈற்றிலும் அப்பாடலின் துறை, வண்ணம், தூக்கு பெயர் ஆகியவற்றைப் பழைய உரையாசிரியர் குறித்துள்ளார்.
- பரிபாடல் போலப் பதிற்றுப்பத்தும் இசையோடு பாடப்பட்ட நூலாகும்.
- 4ஆம் பத்து முழுவதும் அந்தாதித் தொடையாக அமைந்துள்ளது. ஐங்குறுநூற்றின் தொண்டிப்பத்தும் அந்தாதியாக அமைந்துள்ளது.
- அந்தாதித் தொடையைத் தொல்காப்பியர் கூறவில்லை.
- பதிற்றுப்பத்துப் பாடல்கள் அனைத்தும் பாடாண் திணையைச் சார்ந்தவை.

**செய்திகள்**

- கடம்பர் என்பவர்கள் சேரநாட்டுக் கடற் கொள்ளைக்காரர்கள்
- கடற்போரில் கடம்பர்களை வென்ற சேர மன்னர்கள் இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன், சேரன் செங்குட்டுவன்
- எழுமுடி மாலை இமயவரம்பனுக்கு உரியது.
- பழையனின் காவல் மரம் வேம்பு
- பழையனின் ஊர் மோகூர்
- பழையன் என்பவன் பாண்டிய நாட்டுக் குறுநிலமன்னன்
- பழையனை வென்றவன் சேரன் செங்குட்டுவன்
- நன்னனை வென்றவன் களங்காய்ச் சென்னி நார்முடிச்சேரல்
- அதியமனை வென்றவன் பெருஞ்சேரல் இரும்பொறை
- அதியமானுக்கு அதிகன் என்ற பெயரும் உண்டு.
- பகை நாட்டைச் சூறையாடி, பின்வரும் படைக்கு வழியமைக்கும் படை கூளிப்படை.
- கூளிப்படைக்கு அடுத்துச் செல்வது தார்ப்படை.
- தார்படைக்குத் தூசிப்படை என்ற பெயரும் உண்டு.
- கிடுகுப் படையும் உண்டு
- கிடுகு என்றால் கேடயம்.
- சேரநாட்டில் அயிரை மலையில் கொற்றவை கோயில் உண்டு.
- சேரநாட்டுத் துறைமுகம் தொண்டி.
- யவன யாத்திரிகர்கள் தொண்டியைத் துண்டிஸ் என்று குறித்துள்ளனர்.
- கொடுமணம், மாந்தை, பந்தர் என்பன சேரநாட்டு நகரங்கள்.

## பரிபாடல்

- பரிபாடல் என்பது தொல்காப்பியர் கூறும் பாவகையுள் ஒன்று.
- பரிபாடல் சிற்றெல்லை 25 அடி. பேரெல்லை 400 அடி.
- தொல்காப்பியர் பரிபாட்டு அகப்பொருளில் வரும் என்று கூறுகிறார்.
- பாவகையால் பெயர் பெற்ற நூல் பரிபாடல்
- எட்டுத்தொகை நூல்களிலே அகத்திற்கும் புறத்திற்கும் உரிய நூல் பரிபாடல்.
- பொருட்கலவை நூல் என்று கூறப்படுவது பரிபாடல்
- தமிழின் முதல் இசைப்பாடல் பரிபாடல்.
- எட்டுத்தொகை நூல்களுள் அறம், பொருள், இன்பம், வீடு என்ற நான்கையும் கூறும் நூல் பரிபாடல்.
- எட்டுத்தொகை நூல்களுள் பாண்டியர்களைப் பற்றி மட்டும் கூறும் நூல்கள் இரண்டு. 1.பரிபாடல் 2.கலித்தொகை
- பாண்டிய நாட்டைச் சிறப்பிக்கவே பாடப்பட்ட நூல் பரிபாடல்
- பரிபாடல் என்ற நூல் எழுபது பாடல்களைக் கொண்டதாக இருக்கும்.

  திருமாற்கு இர நான்கு, செவ்வேட்கு முப்பத்து
  ஒருபாட்டு, காடுகிழாட்கு ஒன்று – மருவினிய
  வையை இருபத்தாறு, மாமதுரை நான்கென்ப
  செய்ய பரிபாடல் திறம்.

  அதாவது திருமாலுக்கு8, முருகன்31, காடுகிழாள்(காளி)1, வையை26, மதுரை4(8+31+1+26+4)=70
- இப்பொழுது கிடைத்துள்ள பரிபாடலின் 22 பாடல்கள் மட்டுமே உள்ளன. திருமால்6, முருகன்8, வையை8(6+8+8=22).
- பரிபாடலைப் பாடிய புலவர்கள் 13பேர்.
- நல்லச்சுதனார், நன்னாகனார், கேசவனார், கண்ணாகனார், பித்தாமத்தர் போன்றோர் பரிபாடலுக்கு இசை வகுத்துள்ளனர்.
- வையைப் பற்றிய பாடல்கள் அகம் சார்ந்தன.
- கடவுள் வாழ்த்துப் பற்றிய பாடல்கள் புறம் சார்ந்தன.
- பரிபாடலைத் தொகுத்தவர் பெயர் தெரிவில்லை.
- பரிபாடலுக்கு உரை எழுதியவர் பரிமேலழகர்.
- முதலில் பதிப்பித்தவர் உ.வே.சாமிநாதையர்.

### செய்திகள்

- எட்டுத்தொகை நூல்களில் பரிபாடலில் மட்டுமே நான் போன்ற சொற்கள் இடம் பெற்றுள்ளன.

  “நல்லாள் கரைநிற்ப நான் குளித்த பைந்தடத்து” (6:87)
- “கின்று” என்ற காலம் காட்டும் இடைநிலை முதன் முதலில் பரிபாடலில்தான் காணப்படுகிறது. “தீரமும் வையையும் சேர்கின்ற கண்கவின்” - 22:35
- பெரும் பெயர் இருவர்(இருபெருந் தெய்வம்) கண்ணனும் பலராமனும்.
- பலதேவனுக்கு உரியன: பனைக் கொடியும், நாஞ்சில் படையும்
- தொல்காப்பியர் பனைக் கொடிக்கத் தனிவிதி கூறியுள்ளனர்.
- அம்பா ஆடல் என்பது தைநீராடல் ஆகும்.
- தை நீராடல் இன்று மார்கழி நோன்பாக மாறியுள்ளது என்பர்.
- நெய்தல், குவளை, ஆம்பல், சங்கம், கமலம், வெள்ளம் என்பன நீண்ட காலங்களைக் குறிக்கும் பேரெண்களாகும்.(தனிப்பாடல் திரட்டு ‘தோழம்’ என்ற ஒன்றையும் கூறுகிறது).

- திருவாதிரைக்கும் உரிய தெய்வம் சிவபெருமான்.
- பாற்கடல் கடைந்தது, கருடன் தன் தாயின் துயர் களைந்தது, பிரகலாதன் கதை, முருகன் பிறப்பு, அவன் போர்க்கருவி பெற்றது அகலிகை சாபம் போன்ற செய்திகள் முதன்முதலில் பரிபாடலில் தான் காண முடிகிறது. இக் கருத்துகள் பிற தொகை நூல்களில் இல்லாதவை ஆகும்.
- உலகின் தோற்றம் குறித்துக் கூறும் நூல் பரிபாடல்
- பதிற்றுப்பத்தில் பண் இல்லை.
- பரிபாடலில் தாளம் இல்லை.

**கலித்தொகை**

- அகநூல்
- கலிப்பா என்ற பாவகையால் ஆன நூல்
- மொத்தப் பாடல்கள் 150(கடவுள் வாழ்த்துடன்)
- கடவுள் வாழ்த்தைப் பாடியவர் நல்லந்துவனார்
- கலித்தொகையின் கடவுள் வாழ்த்துச் சிவனைப் பற்றியது.
- ஐந்திணை நூல்: பாலை, குறிஞ்சி, மருதம், முல்லை, நெய்தல் என்ற திணைவரிசை உடையது.
- பாலையின் 35 பாடல்களைப் பாடியவர் பெருங்கடுங்கோ
  குறிஞ்சியின் 29 பாடல்களைப் பாடியவர் கபிலர்
  மருதத்தின் 35 பாடல்களைப் பாடியவர் மருதனிளநாகனார்
  முல்லையின் 17 பாடல்களைப் பாடியவர் சோழன் நல்லுருத்திரன்
  நெய்தலின் 33 பாடல்களைப் பாடியவர் நல்லந்துவனார்.
- கலித்தொகையுள் குறைந்த பாடல்களைக் கொண்ட திணை முல்லை, 17பாடல்கள்
- கலித்தொகையைத் தொகுத்தவர் இதில் நெய்தல் திணையைப் பாடிய நல்லந்துவனார்.
- நல்லந்தவனார் என்ற புலவர் மட்டுமே கலித்தொகையை பாடினார் என்ற கொள்கை உடையவர்கள் சி.வை.தாமோதரம் பிள்ளை, எஸ்.வையாபுரிப்பிள்ளை, கே.என்.சிவராஜப்பிள்ளை.
- கலித்தொகைக்கு உரை எழுதியவர் நச்சினார்க்கினியர்
- முதலில் பதிப்பித்தவர் சி.வை.தாமோதரம் பிள்ளை
- ‘கற்றறிந்தோர் ஏத்தும் கலி’ என்று சிறப்பிக்கப்படுகிறது.

**செய்திகள்**

- கலித்தொகையுள் பாண்டியரைத்தவிர மற்ற மன்னர்கள் பற்றிய குறிப்பில்லை
- ஏறு தழுவுதல் பற்றிக் கூறும் நூல் கலித்தொகை
- ஏறு தழுவுதல் என்பது ஒரு வீர விளையாட்டு (ஜல்லிக்கட்டு)
- பெருந்திணைப்பாடல்கள் இடம் பெற்ற ஒரே சங்க நூல் கலித்தொகை
- காமக்கிழத்தி பேசுவதாக அமைந்த ஒரே சங்க நூல் கலித்தொகை
- நின்றீத்தை, போசீத்தை, பாடித்தை, இ∴தொத்தை போன்ற சொற்கள் இடம்பெற்ற ஒரே சங்கநூல் கலித்தொகை
- ஏடா, ஏடீ என்ற விளிச்சொற்கள் இடம் பெற்ற ஒரே சங்க நூல்
- அந்தத்தை அணவுவார் அந்தணர்
- அழகிய குளிர்ந்த தண்மை கொண்டவர் அந்தணர்
- தேவபாணி என்பத கடவுளைப் பரவும் பாட்டு
- கூனி, குறளன் உரையாடல் மருதக் கலியுள் இடம் பெற்றுள்ளது.
- ஆடுமேய்ப்பவர் புல்லினத்தார், குறும்பர் எனப்பட்டனர்
  பசுமேய்ப்பவர் கோவினத்தார், நல்லினத்தார் எனப்பட்டனர்

- நூபுரம் என்பது சிலம்பு
- விச்சை என்பது வித்தை(கல்வி)
- காமனின் தம்பி சாமன்
- சிவன் முப்புரம் எரித்தது, மகாபாரதத்தில் சொல்லப்பட்ட அரக்குமாளிகை, முருகன் சூரபதுமன் போர், இராவணன் கயிலையைப் பெயர்த்தது, வீமன் துரியோதனின் தொடையைப் பிளந்தது, துச்சாதனின் நெஞ்சைப் பிளந்தது, அசுவத்தாமன் சிகண்டியைக் கொன்றது, சூரியனின் மகன் கருணன், ஊர்வசி திலோத்தமை கதை, யயாதி அரசன் கதை, சிவன் தன் சடையில் கங்கையைத் தாங்கியது போன்ற செய்திகள் இடம் பெற்றுள்ளன.
- பாரதக் கதைகளை மிகுதியும் கூறும் நூல் கலித்தொகை
- நாடகம் போன்று காட்சி அமைப்புகளைக் கொண்ட நூல் கலித்தொகை
- இசையோடு கூடிய உரையாடல் அமைந்த நூல் கலித்தொகை

## அகநானூறு

- அகநூல்
- 400 பாடல்கள்
- ஆசிரியப்பாவால் ஆனது.
- பாடியவர்கள் 145 பேர்
- தொகுத்தவர் உருத்திரசன்மனார்
- தொகுப்பித்தவன் பாண்டியன் உக்கிரப்பெருவழுதி
- கடவுள் வாழ்த்துப் பாடியவர் பாரதம் பாடிய பெருந்தேவனார்
- அகநானூற்றின் கடவுள் வாழ்த்துச் சிவனைப் பற்றியது.
- மூன்று பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| 1-120 பாடல் | - | களிற்றியானை நிரை (120 பாடல்கள்) |
| 121-300 பாடல் | - | மணிமிடைபவளம் (180 பாடல்கள்) |
| 301-400 பாடல் | - | நித்திலக் கோவை (100 பாடல்கள்) |

- சிற்றெல்லை 13 அடி பேரெல்லை 31 அடி
- இதற்கு நெடுந்தொகை என்ற பெயரும் உண்டு.
- பாயிரம் பாடியவன் இடையள நாட்டு மணக்குடியான் பால்வண்ண தேவனான வில்லவதரையன்.
- ஓர் ஒழுங்கு முறையின் தொகுக்கப்பட்ட ஒரே தொகை நூல் அகநானூறு
- அவ் ஒழுங்கு முறை வருமாறு

| | | | | |
|---|---|---|---|---|
| 1,3,5,7….ஒற்றைப்படை | - | பாலை | - | 200 |
| 2,8,12,18….இரண்டு,எட்டு | - | குறிஞ்சி | - | 80 |
| 4,14,24….நாலெல்லாம் | - | முல்லை | - | 40 |
| 6,16,26….ஆறெல்லாம் | - | மருதம் | - | 40 |
| 10,20,30….பத்தெல்லாம் | - | நெய்தல் | - | 40 |

- **முதலில் பதிப்பித்தவர் வே.ராசகோபால ஐயங்கார்**
- **நூல் முழுவதும் உரை எழுதியவர்கள் நா.மு.வேங்கடசாமி நாடார், இரா.வேங்கடாசலம் பிள்ளை.**

**செய்திகள்**

- குடவோலைத் தேர்தல் குறித்துக் கூறும் நூல் அகநானூறு.
- சங்க இலக்கியத்துள் வரலாற்றுச் செய்திகளை மிக அதிகமாகக் கூறும் அகநூல் அகநானூறு.
- வடநாட்டுச் செய்திகள் (நந்தர்கள், மௌரியர் படையெடுப்பு, மௌரியர்க்கு வடுகர்துணை) கூறும் நூல் அகநானூறு
  வரலாற்றுச் செய்திகளை மிக அதிகமாகக் கூறும் புலவர்கள் பரணர், மாமூலர்
- சோழ நாட்ட வருவாய் குடந்தையில் வைத்துக் காக்கப்பட்டது.
- பண்டைத் தமிழர் திருமணம் குறித்துக் கூறும் நூல்(86,136) அகநானூறு
- திங்கள் ரோகிணியுடன் கூடிய நன்நாளில் திருமணம் நடந்தது.
- கந்து என்பத வழிபாட்டிற்குரிய மரத்தூண்
- பங்குனி விழா நடைபெற்றது.

**புறநானூறு**

- புறநூல்
- 400 பாடல்கள்
- அகவற்பா
- 158 புலவர்கள்
- தொகுத்தவர், தொகுப்பித்தவர் பெயர் தெரியவில்லை
- புறம், புறப்பாட்டு, புறம்பு, தமிழ்க் கருவூலம் என்ற வேறு பெயர்களும் உண்டு.
- கடவுள் வாழ்த்துப் பாடியவர் பாரதம் பாடிய பெருந்தேவனார்
- புறநானூற்றின் கடவுள் வாழ்த்துச் சிவனைப் பற்றியது.
- தொடரால் பெயர் பெற்ற புலவர்கள்: தொடித்தலை விழுத்தண்டினார் (குழந்தைகளின் நீர் விளையாட்டை ரசித்தவர்), ஊன்பொதி பசுங்குடையார்

**செய்திகள்**

- அறம், பொருள், வீடு என்ற மூன்றையும் பாடும் நூல் புறநானூறு.
- பெண்களின் வீரத்தைக் கூறும் துறை மூதின் முல்லை
- பெண்கள் உடன்கட்டை ஏறினர்
- பூதப்பாண்டியன் மனைவி கோப்பெரும் பெண்டு உடன்கட்டை ஏறினாள்.
- பெண்கள் கைம்மை நோன்பு இருந்தனர்.
- மூவேந்தர்கள் சேரசோழ பாண்டியர் (உம்மைத்தொகை)

**அடையாளப் பூ**

சேரன் - போந்தை (பனை)
சோழன் - ஆர் (அத்தி)
பாண்டியன் - வேம்பு

**அடையாளக் கொடி**

சேரன் - வில்
சோழன் - புலி
பாண்டியன் - கெண்டை (மீன்)

**தலை நகரம்**

சேரன் - வஞ்சி
சோழன் - உறையூர் (உறைந்தை), தஞ்சாவூர் (தஞ்சை), உறையூருக்குக் ‘கோழி’ என்ற பெயரும் உண்டு
பாண்டியன் - மதுரை
பல்லவன் - காஞ்சிபுரம் (காஞ்சி)

**துறைமுகங்கள்**

சேரன் - முசிறி, தொண்டி (ஐங்குறுநூறு)
சோழன் - காவிரிப்பூம்பட்டினம் (பூம்புகார், புகார்)
பாண்டியன் - கொற்கை, தொண்டி (அகநானூறு)
பல்லவன் - மாமல்லபுரம் (மல்லை)

**வேறுபெயர்கள்**

சேரன் - குட்டுவன், கடுங்கோ, வானவன், வானவரம்பன், கோதை, கோக்கோதை, இரும்பொறை
சோழன் - வளவன், கிள்ளி, செம்பியன்
பாண்டியன் - செழியன், மாறன், வழுதி, மீனவன், தமிழ்பெருமான், கவுரியர்

**எட்டுத்தொகை நூல்கள் தொடர்பான பிற செய்திகள்**

- கரிகாலன் போர்செய்த இடம் வெண்ணிப் பரந்தலை நெடுஞ்செழியன் போர் செய்த இடம் தலையாலங்கானம்.
- சேரநாட்டு ஊர் மாந்தை
- நந்தர்களின் ஊர் பாடலிபுத்திரம்
- பல்யானை செல்கெழு குட்டுவனுக்குக்குரியது உம்பர்க்காடு
- பாரதப் போரில் சோறு கொடுத்தவன் உதியஞ்சேரல்
- சோழர்கள் மௌரியர்களைத் தோற்கடித்த இடம் வல்லம்

பாரிக்கு உரியது பறம்புமலை
பேகனுக்கு உரியது பழனிமலை
ஓரிக்கு உரியது கொல்லிமலை
ஆய்க்கு உரியது பொதிகைமலை
அதியமானுக்கு உரியது தகடூர்
நள்ளிக்கு உரியது நளிமலை
காரிக்கு உரியது மலையமான் நாடு

- கபிலரை ஆதரித்தவர் பாரி
  ஔவையாரை ஆதரித்தவன் அதியமான்
  பெருஞ்சித்திரனாரை ஆதிரித்தவன் குமணன்
  மாங்குடி மருதனாரை ஆதரித்தவன் நெடுஞ்செழியன்
- பிசிராந்தையாரிடம் நட்புக் கொண்டவன் கோப்பெருஞ்சோழன்
- அதியமானுக்காகத் தொண்டைமானிடம் தூது சென்றவர் ஔவையார்
- கோப்பெருஞ்சோழனுக்காக அவன் மகனிடம் தூது சென்றவர் புல்லாற்றூர் எயிற்றியனார்
- நலங்கிள்ளிக்கும் நெடுங்கிள்ளிக்கும் இடையே தூது சென்றவர் கோவூர்கிழார்.
- கண்ணகிக்காகப் பேகனைப் பாடியவர்கள் அரிசில் கிழார், கபிலர், பரணர், பெருங்குன்றூர்கிழார்
- இளங்குமணனின் மனத்தை மாற்றியவர் பெருந்தலைச் சாத்தனார்.
- சேரனுக்கும் சோழனுக்கும் நடக்கவிருந்த போரைத் தடுத்தவர் முடமோசியார்.
- கழாத்தலையார் என்ற புலவரைப் பாடியவர் கபிலர்
- கபிலரைப்பாடிய புலவர் நப்பசலையார்
- பொத்தியார் என்ற புலவரைப் பாடியவர் பிசிராந்தையார்
- மோசி என்ற புலவரைப் பற்றிய பாடிய புலவர் பெருஞ்சித்திரனார்.
- புறநானூறு காட்டும் நான்கு பெருந்தெய்வங்கள் சிவன், கண்ணன், பலதேவன், முருகன்

- பல்யாக சாலை முதுகுடுமிப் பெருவழுதி கேள்வி செய்தமை குறித்து வேள்விக்குடிச் செப்பேடுகள் கூறுகின்றன.
- ஆநிரைகளைக் கவர்வோர் சூடும் பூ வெட்சிப் பூ
- மதிலைக்காப்பர் சூடும் பூ காஞ்சிப் பூ
- ஆநிரைகளை மீட்போர் சூடும் பூ நொச்சிப் பூ
- மதிலைமுற்றுகையிடுவோர் சூடும் பூ உழிஞைப் பூ
- பெரும்போரில் இருபெரு வேந்தரும் சூடும் பூ தும்பை பூ
- நிலையாமையைக் கூறும் திணை காஞ்சித்திணை
- நடுக்கல்லைப் பற்றிக் கூறும் தொல்காப்பியத் திணை வெட்சி நடுகல்லைப் பற்றிக் கூறும் புறம்பொருள் வெண்பா மாலையின் திணை பொதுவியல்.

**மேற்கோள்**

"முந்நீர் விழவின் நெடியோன்
நன்னீர் ப.்றுளி மணலினும் பலவே"
"வழிபடுவோரை வல்லறி தீயே
பிறர்பழி கூறுவோர் மொழி தேறலையே"
- ஊன்பொதி பசுங்குடையார்

"அறவை ஆயன் நினதுஎனத் திறத்தல்
மறவை ஆயின் போரொடு திறத்தல்"
- கோவூர்கிழார்

"அறநெறி முதற்றே அரசின் கொற்றம்" - மதுரை இளநாகனார்

"ஒருவனை ஒருவன் அடுதலும் தொலைதலும்
புதுவது அன்று இவ் உலகத்து இயற்கை"
-இடைக்குன்றூர்க் கிழார்

"வரிசை அறிதலோ அரிதே, பெரிதும் ஈதல் எளிது"
-கபிலர்

"உற்றுழி உதவியும் உறுபொருள் கொடுத்தும்
பிற்றை நிலை முனியாது கற்றல் நன்றே" -ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன்

"உண்டி கொடுத்தோர் உயிர்கொடுத்தோரே"
-குடபுலவியனார்

இதனை மணிமேகலையும் கூறுகிறது.

"யாதும் ஊரே யாவரும் கேளிர்
தீதும் நன்றும் பிறர்தர வாரா"
-கணியன் பூங்குன்றனார்

உண்பது நாழி உடுப்பவை இரண்டே-நக்கீரர்
செல்வத்துப் பயனே ஈதல்
- நக்கீரர்

"நல்லத செய்தல் ஆற்றீர் ஆயினும்
அல்லது செய்தல் ஓம்புமின்"

**புலவர்கள்**

- மொத்த சங்கப்பாடல்கள் 2381
- ஆசிரியர் பெயர் தெரியாதவை 102
- அகப்பாடல்கள் 1861

- சங்க இலக்கியத்துள் அகப்பாடல்களில் பாலைத்திணைப் பாடல்களே மிகுதி.
- மொத்த புலவர்கள் 473 பேர்.
- பெண்பாற்புலவர்கள் 30 பேர்.
  ஔவையார், வெள்ளிவீதியார், காக்கைபாடினியார், நற்செள்ளையார், நன்முல்லையார், ஆதிமந்தியார், ஒக்கூர் மாசாத்தியார், நக்கண்ணையார், இளவெயினி, நாகையார் போன்றோர் சிலர்
- அரச குடும்பத்தினர் பாடியவை 31.
  கோப்பெருஞ்சோழன், பாண்டியன் நெடுஞ்செழியன், அறிவுடை நம்பி, கோப்பெரும்பெண்டு, கணைக்கால் இரும்பொறை அவருள் சிலர்.
- நூறு பாடல்களுக்கு மேல் பாடியவர்கள் ஆறு பேர்

| | | |
|---|---|---|
| கபிலர் | - | 235 |
| ஔவையார் | - | 159 |
| அம்மூவனார் | - | 127 |
| ஓரம்போகியார் | - | 110 |
| ஓதலாந்தையார் | - | 107 |
| பேயனார் | - | 105 |

**கபிலர்**

- பாண்டி நாட்டுத் திருவாதவூரில் பிறந்தவர் (மாணிக்கவாசகர் பிறந்த ஊர்)
- அந்தணர்
- குறிஞ்சிபாடுவதில் வல்லவர்
- 'புலன் அழுக்கற்ற அந்தணாளன்' என்று இவரைப் பாடியவர் நப்பசலையார்
- பொய்யா நாவிற் கபிலன் - என்றவர் நப்பசலையார்
- 'நல்லிசை வாய்மொழிக் கபிலன்' என்றவர் நக்கீரர்
- 'வெறுத்த கேள்வி விளங்குபுகழ்க் கபிலன்' என்றவர் இளங்கீரனார்
- 'வயங்கு செந்நாவின்…. கபிலன்' என்றவர் பெருங்குன்றூர்கிழார்
- பரணர், இடைக்காடர், பாரிவள்ளல் இவர்களின் நண்பர் கபிலர்
- பாரி வள்ளலின் அவைக்களப் புலவராகவும் இருந்தவர்
- கிளிக் கூட்டங்களைப் பழக்கி நெற்கதிர்களைக் கொண்டுவரச் செய்து பஞ்சம் தீர்த்தவர்.
- பாரிமகளிரை அழைத்துச் சென்று இருங்கோவேள், விச்சுவக்கோ ஆகிய மன்னர்களிடம் அப்பெண்களை மணந்து கொள்ள வேண்டியவர்.
- பாரியின் மகளிரைப் பார்ப்பாரிடம் அடைக்கலம் கொடுத்தவர்
- கண்ணகியின் பொருட்டுப் பேகனைப் பாடியவர்
- வடக்கிருந்து உயிர் விட்டவர்
- பத்துப்பாட்டு, எட்டுத்தொகை, பதினெண்கீழ்க்கணக்கு என்ற மூன்றிலும் இவரது பாடல்கள் உள்ளன.
- பதினோராம் திரு முறையில் இரட்டைமணி மாலை, திருவந்தாதி பாடிய பக்தி இயக்கக் காலக் கபிலர்
- பன்னிருபாட்டியல் என்ற பாட்டியல் நூலில் சில நூற்பாக்களை இயற்றிய பிற்காலக் கபிலர்.
- கபிலர் அகவல் என்ற தத்துவ நூலின் ஆசிரியரான கபிலர்.

**கோவூர் கிழார்**

- ஊர்ப்பெயரும் மரபுப்பெயரும் சேர்ந்து பெயர் பெற்றவர்

- உறையூர்ச் சோழருக்கும் (நெடுங்கிள்ளி) புகார்ச் சோழருக்கும் (நலங்கிள்ளி) இடையில் போர் நிகழாமல் இருக்கத் தூது சென்றவர்.
- நெடுங்கிள்ளியின் தம்பி நலங்கிள்ளி
- அரசுரிமைப் போரில் தோற்றுக் கதவடைத்தவன் நெடுங்கிள்ளி
- முற்றுகையிட்டிருந்தவன் நலங்கிள்ளி
- 'அறமாயின் திறக்க, மறமாயின் அமர்புரிக, இருவரும் வேறல் இயற்கையும் அன்று, தோற்பது நும்குடி' என்று நெடுங்கிள்ளியிடம் கூறிப் போரை நிறுத்தியவர்.
- நெடுங்கிள்ளி இளந்தத்தனார் என்ற புலவரை ஒற்றன் என்று கருதிக் தண்டிக்க முனைய அப்புலவரைக் காப்பாற்றினார்.
- மலையமான் திருமுடிக்காரியின் குழந்தைகளைக் கிள்ளி வளவன் யானைக்காலில் இட்டுக்கொல்ல முயன்றபோது தடுத்து நிறுத்தியவர்.
- சோறும் நீரும் இரு மருந்து என்று பாடியவர்
- வண்டினை அறுகாற்பறவை என்று பாடியவர்

**பொன்முடியார்**

- பெண்பாற் புலவர்
- 'ஈன்று புரந்தருதல் என்தலைக் கடனே' என்று கடமைகளைப் பாடியவர்.

**பரணர்**

- கபிலரின் நண்பர்
- வரலாற்றுச் செய்திகளை மிகுதியாகப் பாடியவர்
- கொல்லிப்பாவை, அழிசியின் வரலாறு, பெண்கொலை புரிந்த நன்னன், அதியமான், கோவலூரை வென்றது போன்ற செய்திகளைப் பாடியவர்.
- பதிற்றுப்பத்தில் ஐந்தாம் பத்தின் கடற்பிறக்கோட்டிய செங்குட்டுவனைப் பாடி உம்பற்காட்டு வருவாயையும் அவன் மகன் குட்டுவன் சேரலையும் பரிசாகப் பெற்றவர்.

**ஔவையார்**

- ஔவை என்பதற்குத் தாய் என்று பொருள்
- பாண்குடியில் பிறந்தவர்
- 159 பாடல்களைப் பாடியுள்ளார்
- அதியமானின் அவைக்களப் புலவர்/நண்பர்
- அதியமானுக்கும் தொண்டைமானுக்கும் இடையே தூது சென்றவர். "இவ்வே பீலி அணிந்து" என்ற பாடலை அப்போது பாடினார்.
- "சிறியகட் பெறினே எமக்கீயும் மன்னே
  பெரியகட் பெறினே
  யாம்பாடத் தாம் மகிழ்ந்து உண்ணும் மன்னே" என்ற பாடலை அதியமான் இறந்தபோது பாடியவர்.
- அதியமானின் மகன் பொகுட்டெழினியைப் பாடியவர்
- சோழன் பெருநற்கிள்ளி, சேரமான் மாரிவெண்கோ, பாண்டியன் உக்கிரப் பெருவழுதி ஆகிய மூவரும் சேர்ந்திருந்த காட்சியைப் பாடியவர்.
- 'நீல மணிமிடற்று ஒருவன் போல மன்னுக பெரும' என்று நெல்லிக்கனி தந்த போது அதியமானை வாழ்த்தியவர்.

- **“அணுவைத் துளைத்து எழுகடலை உட்புகுத்திக் குறுகத் தறித்த குறள்” என்று திருக்குறளைப் புகழ்ந்தவர் பிற்கால ஔவையார்.**
- **பாரியின் மக்களான அங்கவை, சங்கவை என்ற இரு பெண்களையும் திருமணம் செய்த கொடுத்தவர்.**
- இலக்கிய வரலாற்றில் ஐந்து ஔவையார்கள் உள்ளனர்.

❖ சுட்டகனி வேண்டுமா, சுடாத கனி வேண்டுமா, என்று முருகன் கேட்ட புராண ஔவையார்.
❖ அதியமானைப் பாடிய புறநானூற்று ஔவையார்
❖ ஆத்திசூடி கொன்றைவேந்தன், மூதுரை, நல்வழி போன்ற சிறுவர் நீதி நூல்களைப் பாடிய சோழர்கால ஔவையார்.
❖ தனிப்பாடல் திரட்டில் உள்ள சில பாடல்களைப் பாடிய இடைக்கால ஔவையார்.
❖ விநாயகர் அகவல், ஞானக்குறள் பாடிய பிற்கால ஔவையார்.

- தாயோடு அறுசுவைபோம் தந்தையோடு கல்விபோம் என்று பாடியவர் தனிப்பாடல் திரட்டு ஔவையார்.
- மலைநாடு வேழம் உடைத்து
  சோழ வளநாடு சோறுடைத்து
  பாண்டி நாடு முத்துடைத்து
  தொண்டைநாடு சான்றோர் உடைத்து
  -என்பது ஔவை வாக்கு

**பிசிராந்தையார்**

- பாண்டி நாட்டுப் புலவர்
- பாண்டியன் அறிவுடை நம்பியிடம் சிறுகச் சிறுக வரிவாங்க வேண்டும் என்று அறிவுறுத்தியவர் பிசிராந்தையார்
- குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவனிடம் நிலவரியை நீக்கப் பாடியவர் வெள்ளைக் குடி நாகனார்.
- தலைமுடி நரைக்காமலிருக்கக் காரணம் சொன்னவர்
- கோப்பெருஞ்சோழனின் நண்பர்
- காணாமலே நட்புக் கொண்டவர்கள்
- கோப்பெருஞ்சோழனுடன் வடக்கிருந்த உயிர்விட்டவர்

## எட்டுத்தொகை

| வ. எண் | நூல் | ஆசிரியர் எண்ணிக்கை | பாடல் எண்ணிக்கை | எல்லை | பொருள் | தொகுத்தவர் | தொகுப்பித்தவர் | கடவுள் வாழ்த்துப் பாடியவர் | தெய்வம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | நற்றிணை | 175 | 400 | 9-12 | அகம் | தெரியவில்லை | பன்னாட்டு தந்த பாண்டிய மாறன்வழுதி | பாரதம் பாடிய பெருந்தேவனார் | திருமால் |
| 2 | குறுந் தொகை | 203 | 400 | 4-8 | அகம் | பூரிக்கோ | தெரியவில்லை | பாரதம் பாடிய பெருந்தேவனார் | முருகன் |
| 3 | ஐங்குறுநூறு | 5 | 500 | 3-6 | அகம் | புலத்துறைலூர்க் கிழார் முற்றிய கூட | யானைக்கட்சேய் மாந்தரஞ்சேரல் இரும்பொறை | பாரதம் பாடிய பெருந்தேவனார் | சிவன் |
| 4 | பதிற்றுப் பத்து | 8 | 80 | - | புறம் | தெரியவில்லை | தெரியவில்லை | கிடைக்கவில்லை | - |
| 5 | பரிபாடல் | 13 | 22 | 25-400 | அகம்-புறம் | தெரியவில்லை | தெரியவில்லை | - | - |
| 6 | கலித் தொகை | 5 | 150 | - | அகம் | நல்லந்துவனார் | தெரியவில்லை | நல்லந்துவனார் | சிவன் |
| 7 | அகநானூறு | 145 | 400 | 13-31 | அகம் | உருத்திரசன்மனார் | | பாரதம் பாடிய பெருந்தேவனார் | சிவன் |
| 8 | புறநானூறு | 158 | 400 | - | புறம் | தெரியவில்லை | தெரியவில்லை | பாரதம் பாடிய பெருந்தேவனார் | சிவன் |

# அலகு 06

## விடுதலைப் போராட்டத்தில் பெண்களின் பங்கு

- இந்திய சுதந்திரப் போராட்ட வரலாற்றில் பல கட்டங்களில் தமிழக மக்கள் பங்கு பெற்று தங்களின் தியாகங்களை செந்நீரால் எழுதினர். குறிப்பாக விடுதலைப் போரில் தமிழக மகளிரின் பங்கு குறிப்பானது.

### வேலுநாச்சியார் (1730 - 1796)

- **தமிழர்களின் 'வீரமங்கை' எனவும் 'தென்னிந்தியாவின் ஜான்சிராணி' எனவும் அறியப்படுகிறார்.**
- **பிறப்பு:** 1730 ம் ஆண்டு
- **பெற்றோர்:** இராமநாதபுரத்தை ஆண்ட மன்னர் செல்லமுத்து சேதுபதி - சக்கந்தி முத்தாத்தாள்.
- ஜான்சிராணிக்கு முன்பே ஆங்கிலேயரை எதிர்த்து வீரப்போர் புரிந்த முதல் பெண்மணி வேலுநாச்சியார்.
- சிலம்பம், குதிரை ஏற்றம், வாள்போர், வில்பயிற்சி ஆகியவற்றையும் முறையாகக் கற்றுக்கொண்டார். சிவகங்கை மன்னர் முத்துவடுகநாதரை மணந்து மகிழ்ச்சியோடு வாழ்ந்து வந்தார்.
- ஆங்கிலேயர் 1772ம் ஆண்டு சிவகங்கைச் சீமையின்மீது படையெடுத்தனர்.
- காளையார்கோவிலில் நடைபெற்ற போரில் முத்துவடுகநாதர் ஆங்கிலப் படையுடன் போரிட்டு வீரமரணம் அடைந்தார்.
- வேலுநாச்சியார் ஆங்கிலேயரை வென்று சிவகங்கையை மீட்க உறுதி பூண்டார்.
- திண்டுக்கல் கோட்டையில் தங்கி ஒரு படையைத் திரட்டிப் பயிற்சி அளித்தார்.
- திண்டுக்கல் கோட்டையில் ஆலோசனைக் கூட்டம் ஒன்று நடந்து கொண்டிருந்தது. கூட்டத்தில் நடுவே வீரமங்கை வேலுநாச்சியார் அமர்ந்திருந்தார். அவரைச் சுற்றி அமைச்சர் தாண்டவராயர், தளபதிகளாகிய பெரியமருது, சின்னமருது மற்றும் குறுநில மன்னர்கள் சிலர் இருந்தனர்.
- நாம் முதலில் காளையார்கோவிலைக் கைப்பற்றுவோம். பிறகு சிவகங்கையை மீட்போம் என்றார் வேலுநாச்சியார்.
- வேலுநாச்சியாரின் போர்ப்படையில் வாள்படை, வளரிப்படை, பெண்கள் படை ஆகிய மூன்றும் பிரதானமானவை. வாள்படைக்கு தலைமை ஏற்றவர் சின்னமருது, வளரிப்படைக்குத் தலைமை ஏற்றவர் பெரியமருது, பெண்கள் படைக்குத் தலைமையேற்றவர் குயிலி.
- ஆண்கள் படைப்பிரிவுக்கு மருது சகோதரர்களும் பெண்கள் படைப்பிரிவுக்குக் குயிலியும் தலைமை ஏற்றனர்.
- சிவகங்கை கோட்டைக் கதவுகள் விசயதசமித் திருநாள் அன்று திறக்கப்படும்.
- விசயதசமி நாளில் கோட்டைக்குள் செல்வதற்குப் பெண்களுக்கு மட்டும் அனுமதி உண்டு.
- வேலு நாச்சியார், மைசூர் மன்னர் ஐதர் அலியைச் சந்தித்து, ஆங்கிலேயரை எதிர்ப்பது குறித்து கலந்து பேசினார்.
- ஐதர் அலி ஐயாயிரம் படைவீரர்களை அவருடன் அனுப்பினார்.
- மருது சகோதரர்களுடன் வீரர்படைக்குத் தலைமையேற்றுச் சென்ற வேலு நாச்சியார் ஆங்கிலேயரை எதிர்த்து போரிட்டார். அப்போரில், கணவரைக் கொன்றவர்களை வென்று 1780ஆம் ஆண்டில் சிவகங்கையை மீட்டார்.

### குயிலி(போராளி)

- பதினெட்டாம் நூற்றாண்டில் பிரித்தானியக் கிழக்கிந்தியக் கம்பெனிக்கு எதிராக ஆயுதம் ஏந்திப் போராடிய பெண் போராளி வீரமங்கை குயிலி. இவர் சிவகங்கை சீமையை சேர்ந்த பெண்போராளி ஆவார்.

- வேலுநாச்சியார் தலைமறைவாக இருந்த 8 ஆண்டு காலத்தில் ஆங்கிலேயர்களுக்கான உளவு பார்த்த வெற்றிவேல் என்பவரை குயிலி என்ற பெண் குத்திக் கொன்றார்.
- அதனால் வேலுநாச்சியார் தனது மெய்க்காப்பாளராக குயிலியை நியமித்தார்.
- 1780-ல் வேலுநாச்சியார் மானாமதுரை, திருப்பூர், திருப்புவனம், காளையார்கோவில் போன்ற இடங்களை மீட்டார். மருதுபாண்டியர் ஹைதர் அலி ஆகியோரின் உதவியுடன் சிவகங்கையை மீட்க படையெடுத்தார் வேலுநாச்சியார்.
- சிவகங்கை அரண்மனையில் வெள்ளையரின் ஆயுதக்கிடங்கு இருந்ததால் அப்பகுதிக்குள் யாரும் செல்ல அனுமதி இல்லை.
- பெண்கள் படையில் இருந்த குயிலி தன் உடம்பில் எரி நெய்யை ஊற்றி தீ வைத்து வெள்ளையரின் ஆயுதக்கிடங்கில் குதித்து தற்கொலை தாக்குதல் நடத்தி ஆயுதங்களை அழித்தாள்.

## உடையாள்

- உடையாள் என்பவள் ஒரு மாடு மேய்க்கும் சிறுமி.
- காளையார் கோவிலில் தன் கணவரைப் பறிகொடுத்த வேலுநாச்சியார் அரியாக்குறிச்சி என்கிற ஊரின் வழியாக பயணம் மேற்கொண்டார்.
- வேலுநாச்சியாரைப் பின்தொடர்ந்து வந்த எதிரிகள் உடையாளிடம் வேலுநாச்சியார் சென்ற பாதை குறித்துக் கேட்ட பொழுது காட்டிக் கொடுக்க மறுத்தாள்.
- எதிரிகளால் உடையாள் வெட்டிப் படுகொலை செய்யப்பட்டாள்.
- வெள்ளையாரால் வெட்டப்பட்ட உடையாளுக்கு வீரக்கல் ஒன்றை நட்டு, நமது திருமாங்கல்யத்தை காணிக்கையாகச் செலுத்தி அஞ்சலி செலுத்தினார் வேலுநாச்சியார்.
- உடையாளின் நினைவாக குயிலி தலைமையிலான பெண்கள் படைக்கு உடையாள் பெண்கள் படை எனப் பெயர் சூட்டியிருந்தார் இராணி வேலு நாச்சியார்.

## இராணி மங்கம்மாள்

- மதுரையை ஆண்டு வந்த சொக்கநாத நாயக்கரின் மனைவி இராணி மங்கம்மாள். இராணி மங்கம்மாளின் கணவர் இறந்தபோது தன்மகன் அரங்க கிருஷ்ணமுத்துவீரப்பன் இளம் வயதினனாக இருந்தான்.
- **"அரசாட்சியை அடக்கத்தோடும் தந்திரத்தோடும் நாம் நோக்கவேண்டும்: முன்கோபமும் அதன் விளைவும் அரசியலில் ஒருபோதும் வெற்றியைத் தராது: பகைவரை எதிர்கொள்ள எப்போதும் ஆயத்த நிலையில் இருப்பதோடு மிகுந்த பொறுமையுடனும் செயல்பட வேண்டும்"** என்றெல்லாம் மகனுக்கு அறிவுரை கூறினார்.
- நேர்மையைக் காட்டிலும் உயர்ந்த தெய்வம் இல்லை என்னும் உணர்வோடும் நடுவுநிலைமை மணமோடும் அமைதியாக ஆட்சி நடத்தி மக்களிடம் நற்பெயர் பெற்றான். ஏழாண்டுக்காலம் ஆட்சி நடத்திய அவன், அம்மைநோய் கண்டு உலக வாழ்வை நீத்தான்.
- மகன் இறந்த சில நாளில் மருமகள் சின்னமுத்தம்மாள் அழகிய ஆண்மகனைப் பெற்றெடுத்தாள்.
- மகன் முத்துவீரப்பன் இறந்ததால், கி.பி.1688-ஆம் ஆண்டு பெயரன் விசயரங்கச் சொக்கநாதன் பெயரளவில் அரியணையில் ஏற்றப்பட்டான். பாட்டி மங்கம்மாள் காப்பாட்சியாளராக ஆட்சிப் பொறுப்பினை ஏற்றார். மங்கம்மாள் துயரங்களைத் தாங்கிக்கொண்டு ஆட்சிக் கடமைகளை அழகுற ஆற்றக்கூடிய வீராங்கனை என மக்கள் போற்றிப் புகழ்ந்தனர்.
- ஒவ்வொருவரும் தாம் சிறந்ததாகக் கருதும் சமயத்தைக் கைக்கொண்டு வாழவிடுவதே தருமம் என்ற கொள்கையை மங்கம்மாள் பின்பற்றினார்.
- சமயத் தொடர்பாகச் சிறை வைக்கப்பட்ட மெல்லோ பாதிரியாரை விடுதலை செய்ததோடு போசேத் என்ற குருவைத் தம் அரசவையில் வரவேற்று விருந்தோம்பினார்.
- மக்கள் நலம்பேணும் நல்ல பல பணிகளை மங்கம்மாள் செய்துள்ளார். அவர், மதுரையில் பெரியதொரு அன்னச்சத்திரத்தைக் கட்டினார் புதிய சாலைகள் பல அமைத்தார் கன்னியாகுமரிக்கும் மதுரைக்கும் இடையே அமைந்த நெடுஞ்சாலை மங்கம்மாள் சாலை என அழைக்கப்படுகிறது.

- ஆனித்திங்களில் ஊஞ்சல் திருவிழா நடைபெற ஏற்பாடு செய்தார்.
- மத்திய சந்தை, மதுரை கல்லூரி உயர்நிலைப்பள்ளி கட்டடம், இராமநாதபுர மாவட்ட ஆட்சித் தலைவரின் பழைய அலுவலகம் முதலியவற்றை மங்கம்மாள் கட்டியதாக கூறுவர்.
- சித்திரை முழுமதி நாளில் இராணி மங்கம்மாளும் இளவரசரும் தமுக்கம் அரண்மனையில் தங்கி, மீனாட்சி திருமணத்தை கண்டுகளித்தனர்.
- "தென்னாட்டைத் தன்னந்தனியே ஆண்ட பெண்ணரசி" என்னும் புகழைப் பெற்றவர்.

## தில்லையாடி வள்ளியம்மை

- **பிறப்பு:** 1898
- **பெற்றோர்:** முனுசாமி, மங்களம்
- **இடம்:** தென் ஆப்பிரிக்காவில் ஜோகன்ஸ்பர்க்
- வள்ளியம்மை தென்னாப்பிரிக்காவில் பிறந்தார். எனினும், இவரின் தாயார் பிறந்த ஊரான தில்லையாடியின் பெயரைக்கொண்டு தில்லையாடி வள்ளியம்மை என்று அழைக்கப்படுகிறார்.
- தில்லையாடி-திருக்கடையூர்(நாகப்பட்டினம் மாவட்டம்)

### அறப்போர்

- தென்னாப்பிரிக்க நாட்டின் திருமணப்பதிவுச் சட்டப்படியும், கிறித்துவ மதச்சட்டப்படியும் நடைபெறாத திருமணம் செல்லாது என்று அந்நாட்டு உச்சநீதிமன்றம் 1913-ம் ஆண்டு ஒரு தீர்ப்பை வெளியிட்டது. அத்தீர்ப்பு, அங்குக் குடியேறியிருந்த இந்தியர்கள் அனைவருக்கும் எதிராக அமைந்திருந்தது. இதனால் பாதிக்கப்பட்ட இந்தியர்கள் தனது உரிமையை மீட்க அறப்போராட்டத்தில் ஈடுபட்டார்கள்.
- அப்போராட்டத்தினைக் காந்தியடிகள் தலைமை ஏற்று வழிநடத்தினார்.
- 1913 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 23ஆம் நாள் வால்க்ஸ்ரஸ்ட் என்னும் இடத்தில் நடைபெற்ற அறப்போரில் வள்ளியம்மை கைது செய்யப்பட்டார். அவருக்குத் தென்னாப்பிரிக்க நீதிமன்றம் மூன்று மாத கடுங்காவல் தண்டனை அளித்தது.
- "சிறைத்தண்டனைக்காக நீ வருந்துகிறாயா?", என்று வள்ளியம்மையிடம் கேட்டார் காந்தியடிகள், உடல்நிலை தளர்ந்திருந்த அந்நிலையிலும் வள்ளியம்மை. "இல்லை இல்லை மீண்டும் சிறை செல்லத் தயார்" என்று கூறினார்.
- சிறைச்சூழலால் உடல்நலம் குன்றிய வள்ளியம்மை 1914 பிப்ரவரி 22 ஆம் நாளன்று 16ஆம் அகவையில் மரணம் அடைந்தார்.

### காந்தியடிகளின் கருத்து

- "என்னுடைய சகோதரியின் மரணத்தைவிடவும் வள்ளியம்மையின் மரணம் எனக்குப் பேரிடியாக இருந்தது" என்று காந்தியடிகள் மனம் வருந்தினார்.
- நம்பிக்கைதான் அவரது ஆயுதம் என்று தில்லையாடி வள்ளியம்மை குறித்து இந்தியன் ஒப்பீனியன் இதழில் காந்தியடிகள் எழுதியுள்ளார்.
- மாதர்களுக்கு அணிகலன்களாகத் திகழும் துன்பத்தைத் தாங்கும் மனவலிமை, தன்மானம், நல்லொழுக்கம் ஆகியவற்றின் இலக்கணமாகத் திகழ்ந்தார்.
- தென்னாப்பிரிக்க வரலாற்றில் வள்ளியம்மையின் பெயர் என்றும் நிலைத்து நிற்கும் என்று காந்தியடிகள், தென்னாப்பிரிக்கச் சத்தியகிரகம் என்னும் நூலில் குறிப்பிட்டுள்ளார்.
- காந்தியின் வாழ்க்கைப் பயணத்தில், அவர் மேற்கொண்ட சத்தியாக்கிரக வேள்விப்பணிக்கு முதல் களப்பலியாகி அவரை மகாத்மா என்ற உயர்நிலை நோக்கித் திருப்பிய பெருமை தில்லையாடி வள்ளியம்மைக்கு உண்டு.

### அரசு செய்த சிறப்புகள்

- வள்ளியம்மையின் நினைவைப் போற்றும்வகையில் தில்லையாடியில் தமிழ்நாடு அரசு அவரது சிலையை நிறுவியுள்ளது.

- கோ-ஆப்-டெக்ஸ் என்றழைக்கப்படும் தமிழ்நாடு நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் சென்னையிலுள்ள தனது அறுநூறாவது விற்பனை மையத்திற்குத் தில்லையாடி வள்ளியம்மை மாளிகை என்று பெயர் சூட்டிப் பெருமைப்படுத்தி உள்ளது.
- சென்னை, வண்டலூர், உயிரியல் பூங்காவில் பிறந்த பெண்புலிக்குட்டிக்குத் தமிழக முதல்வர் கலைஞர், தில்லையாடி வள்ளியம்மை நினைவாக வள்ளி எனப்பெயரிட்டு அவருக்குச் சிறப்பு செய்துள்ளார்.

## கடலூர் அஞ்சலையம்மாள்

- **பிறப்பு:** 1890 ஆம் ஆண்டு
- **ஊர்**: கடலூரில் உள்ள முதுநகர்
- 1921ஆம் ஆண்டு காந்தியடிகள் ஒத்துழையாமை இயக்கத்தைத் தொடங்கியபோதே, அஞ்சலையம்மாளும் தமது பொதுவாழ்க்கையைத் தொடங்கினார்.
- நீலன் சிலையை அகற்றும் போராட்டம் உப்பும் காய்ச்சும் போராட்டம், மறியல் போராட்டம், தனிநபர் அறப்போராட்டம், வெள்ளையனே வெளியேறு இயக்கம் ஆகிய அனைத்துப் போராட்டங்களிலும் கலந்துகொண்டு பல ஆண்டுகள் சிறையில் வாடினார். மேலும் அவர் கடலூர், திருச்சி, வேலூர், பெல்லாரி ஆகிய சிறைகளில் இருந்துள்ளார்.
- வேலூர்ச் சிறையில் இருந்தபோது, கருவுற்றநிலையில் இருந்த அவரை ஆங்கிலேய அரசு வெளியில் அனுப்பிவிட்டு, மகப்பேற்றிற்குப் பின் மீண்டும் சிறையில் அடைத்தது.

### காந்தியடிகளுடன் சந்திப்பு

- நீலன் சிலையை அகற்றும் போராட்டத்தில் தம்முடைய ஒன்பது வயது மகளையும் ஈடுபடுத்தினார். இவருடன் இவர் மகளும் சிறைத்தண்டனை பெற்றார்.
- காந்தியடிகள் சிறையில் இருப்பவர்களைப் பார்க்க வந்தபோது, ஒன்பது வயதேயான அம்மாக் கண்ணு, அஞ்சலையம்மாளின் மகள் என்பதையறிந்து, மிகவும் மகிழ்வுற்று, அச்சிறுமியைத் தன்னுடன் வார்தாவில் உள்ள ஆசிரமத்துக்கு அழைத்துச்சென்று **"லீலாவதி"** என்று பெயரிட்டுப் படிக்கவும் வைத்தார்.
- காந்தியடிகள் கடலூருக்கு வந்தபோது, அவரைச் சந்திப்பதற்கு அஞ்சலையம்மாளுக்கு ஆங்கில அரசு தடை விதித்தது.
- ஆனால் அஞ்சலையம்மாள் பர்தா வேடமணிந்து குதிரை வண்டியில் காந்தியடிகளை ஏற்றுச் சென்றார்.
- காந்தியடியகள் அஞ்சலையம்மாளைத் **"தென்னாட்டின் ஜான்சிராணி"** என்றழைத்தார்.

## அம்புஜத்தம்மாள்

- **பிறப்பு:** ஜனவரி 8, 1899
- வீட்டிலேயே தமிழ், ஆங்கிலம், இந்தி, சமஸ்கிருதம் எனப் பலமொழிகளையும் திறம்படப் பயின்றார்.
- அன்னை கஸ்துாரிபாயின் எளிமையான தோற்றத்தினால் கவரப்பட்டு, எளிமையாக வாழ்ந்தார்.
- வை.மு.கோதைநாயகி அம்மாள், ருக்குமணி லட்சுமிபதி முதலியவர்களோடு நட்பு கொண்டு பெண்ணடிமைக்கு எதிராக குரல் கொடுத்தார்.
- மகாகவி பாரதியாரின் பாடல்களைப்பாடி விடுதலையுணர்வை ஊட்டினார்.
- பல்வேறு கட்டுப்பாடுகள் மிகுந்த குடும்பத்திலிருந்து தம்மை விடுவித்துக் கொண்டு நாட்டு விடுதலைக்காகப் பாடுபட்டார்.
- அந்நியத் துணிகள் விற்கும் கடைக்கு முன்பாக மறியல் போராட்டம் நிகழ்த்தியதால் வேலூர்ச்சிறையில் அடைக்கப்பட்டார்.
- அம்புஜத்தம்மாள் தம் எழுபதாண்டு நினைவாக,**"நான் கண்ட பாரதம்"** என்ற அரியநூலை எழுதியுள்ளார்.
- 1964ம் ஆண்டு**"தாமரைத்திரு"** (பத்மஸ்ரீ) விருது பெற்றுள்ளார்.

- "**காந்தியடிகளால் தத்தெடுக்கப்பட்ட மகள்**" என்று செல்லமாக அழைக்கப்பட்டார்.
- தந்தையின் பெயரோடு காந்தியடிகளின் பெயரையும் இணைத்துச் "**சீனிவாச காந்தி நிலையம்**" என்ற தொண்டுநிறுவனத்தை அமைத்தார்.

## டாக்டர் எஸ்.தருமாம்பாள்

- **இடம்:** தஞ்சாவூருக்கு அருகில் திருவையாறு
- சமூக சேவையில் அதிக ஈடுபாடு கொண்ட தர்மாம்பாள் சித்த மருத்துவம் பயின்று சென்னையில் மருத்துவமனை ஒன்றை தொடங்கினார்.பின்னர் பொதுச்சேவையில் ஈடுபட்டார்.
- தந்தை பெரியாரின் கருத்துக்களால் ஈர்க்கப்பட்ட இவர் விதவைகள் மறுமணம், கலப்பு மணம் மற்றும் பெண் கல்வி போன்றவற்றில் ஆர்வம் காட்டினார்.
- இந்தி எதிர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டு பல முறை சிறை தண்டனை பெற்றார்.
- 1940 ஆம் ஆண்டு வரை சமுதாயத்தில் தமிழாசிரியர்களுக்கு மதிப்பு இல்லை. ஊதியம் உயர்த்தப்படவில்லை. எனவே இழவு வாரம் என்ற போராட்டத்தை தொடங்கினார்.
- இதன் விளைவாக கல்வி அமைச்சராக இருந்த திரு.அவிநாசிலிங்கம் செட்டியார் பிற ஆசிரியர்களுக்கு இணையான ஊதியத்தை தமிழ் ஆசிரியர்களுக்கும் வழங்க உத்தரவிட்டார்.
- இவர் தமிழ் மொழி மற்றும் தமிழ் இலக்கியத்திற்கு ஆற்றிய சேவைகளை '**வீரத்தமிழன்னை**' என்ற பட்டம் 1951ல் வழங்கப்பட்டது.
- 1938-ல் சென்னை பெண்கள் மாநாட்டில் தருமாம்பாள் ஈ.வே.ராமசாமி நாயக்கருக்கு பெரியார் என்ற பட்டத்தையும், எம்.கே.தியாகராஜ பாகவதருக்கு ஏழிசை மன்னர் என்ற பட்டத்தையும் வழங்கினார். அந்த மாநாட்டின் தலைவர் நீலாம்பிகை.
- அம்மையார் தனது 69வது வயதில் 1959ம் ஆண்டு காலமானார்.

## மூவலூர் இராமாமிர்தம் அம்மையார்

- **பிறப்பு:** 1883ம் ஆண்டு
- **இடம்:** திருவாரூரில் (மயிலாடுதுறைக்கு அருகிலுள்ள மூவலூர்).
- எனவே மூவலூர் இராமாமிர்தம் என்றழைக்கப்பட்டார்.
- இவர் இசை வேளாளர் குலத்தைச் சார்ந்தவர்.
- பழங்காலத்தில் இக்குலத்தில் பிறந்த பெண்கள் இறைப்பணி மற்றும் கலைப்பணிக்காக அர்பணிக்கப்பட்டனர்.
- தம் குலத்துப் பெண்கள் தாழ்ந்த நிலையில் இருப்பதையும்,பல்வேறு வழிகளில் துன்புறுத்தப்படுவதையும் உணர்ந்த இராமாமிர்தம் அம்மையார், அவர்களின் விடுதலைக்காக தனது வாழ்வை அர்பணிக்க முடிவு செய்தார். நாடு முழுவதும் தங்கள் இனப்பெண்களுக்கு இழைக்கப்படும் அநீதியை எடுத்துச் சொல்லி, அவர்களது விடுதலைக்கு ஆதரவு திரட்டினார்.
- 1925ம் ஆண்டு மயிலாடுதுறையில் இசை வேளாளர் மாநாட்டைக் கூட்டினார். இம்மாநாட்டில் தமிழறிஞர் திரு.வி.க, பெரியார், மாயூரமணி சின்னையா பிள்ளை, எஸ்.இராமநாதன் போன்றோர் கலந்துகொண்டனர்.
- இவர்கள் தேவதாசி முறைக்கு எதிராக குரலெழுப்பினர்.
- இது டாக்டர்.முத்துலட்சுமி ரெட்டி, தேவதாசி முறை ஒழிப்புச் சட்டம் கொண்டுவர ஆணிவேராக அமைந்தது.
- இவரது அரிய உழைப்பையும், தியாகத்தையும் போற்றும் வகையில் தமிழக அரசு, ஏழைப் பெண்களுக்கு திருமண நிதி உதவியளிக்கும் ஒரு சமூகத் திட்டத்தை ஏற்படுத்தி அதற்கு "மூவலூர் இராமாமிர்தம் அம்மாள் நினைவு திருமண உதவித் திட்டம்" என்று பெயரிட்டு இவரைக் கௌரவித்தது.
- 1962ம் ஆண்டு ஜூன் மாதம் 27ம் தேதி இந்த உலகை விட்டு மறைந்தார்.
- இவரை தமிழகத்தின் அன்னிபெசன்ட் என அழைத்தவர் அண்ணா.

## டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி

- **பிறப்பு:** ஜுலை 30, 1886
- **இடம்:** புதுக்கோட்டையில் பிறந்தார்.
- தென் இந்தியாவின் முதல் பெண் மருத்துவராவார். 1923ம் ஆண்டு இவரது தங்கை புற்றுநோயால் பாதிக்கப்பட்டு இறந்தார்.
- 1926இல் முத்துலெட்சுமி அம்மையார் இந்தியாவின் முதல் சட்டமன்ற உறுப்பினரானார்.
- 1949 ஆம் ஆண்டு புற்றுநோய் மருத்துவ நிவாரண மருத்துவமனையை தொடங்கினார். இவரது சீறிய முயற்சியால் சென்னை அடையாறு புற்றுநோய் ஆராய்ச்சி நிறுவனம் தோற்றுவிக்கப்பட்டது.
- 1952 அக்டோபர் மாதம் இந்தியப்பிரதமர் ஜவஹர்லால்நேரு இந்த மருத்துவமனைக்கான அடிக்கல்லை நாட்டினார்.
- சென்னை மாநகராட்சியின் முதல் துணை மேயர் இவரே.

### தேவதாசி முறை ஒழிப்பு

- சமுதாய மாற்றத்திற்கு முன்னோடியாக தமிழ்நாடு விளங்குகிறது. தமிழ்ச் சமூகத்தில் கரும்புள்ளிகள் போல சில சீர்கேடுகள் காணப்பட்டு அவை நீக்கப்பட்டன. அவற்றுள் ஒன்று தேவதாசி முறையாகும். சமூக அவலத்தைப் போக்க டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி தீவிரமாக போராடிய பெண்மணிகளில் முக்கியமானவர்களில் ஒருவராவர்.
- தேவதாசி முறை ஒழிப்பில் இவர் கொண்டிருந்த ஈடுபாட்டின் காரணமாக 1929-ம் ஆண்டு தமிழக சட்டமன்ற மேலவை உறுப்பினராக நியமனம் செய்யப்பட்டார்.
- டாக்டர் முத்துலட்சுமி மருத்துவம் மட்டுமன்றி அரசியல் மற்றும் சமூக சீர்திருத்தங்களில் ஆர்வம் கொண்டிருந்தனர்.
- தந்தை பெரியார், திரு.வி.கல்யாணசுந்தரம் போன்றவர்கள் இவரது கருத்தை தீவிரமாக ஆதரித்தனர். இதன் விளைவாக நீதிக்கட்சி அரசாங்கம் தேவதாசி ஒழிப்பு சட்டத்தை நிறைவேற்றியது.

### பெண்கள் மேம்பாடு

- 1930-ம் ஆண்டு பூனாவில் அனைத்திந்திய பெண்கள் மாநாட்டை நடத்தினார்.
- இந்தியப் பெண்கள் சங்கத்தின் முதல் தலைவர் என்னும் பெருமையைப் பெற்றவர். 1933 முதல் 1947 வரை இடையில் இரு வருடங்கள் தவிர தொடர்ந்து இந்திய மாதர் சங்கத் தலைவியாக இருந்தார். இச்சங்கம் நடத்திய பெண்களுக்கான "ஸ்திரீ தருமம்" என்னும் மாத இதழின் ஆசிரியராக பணியாற்றினார்.
- ஆதரவற்றவர்களுக்கு மறுவாழ்வு தரும் பொருட்டு **அவ்வை இல்லம்** என்ற அடைக்கல நிலையத்தை 1930-ல் சாந்தோமில் தொடங்கினார். தற்சமயம் இவ்வில்லம் சென்னை அடையாறில் செயல்பட்டு வருகிறது.
- டாக்டர் முத்து லட்சுமி ரெட்டி 1968-ம் ஆண்டு தனது 82-வது வயதில் இந்த உலக வாழ்வைத் துறந்தார்.
- **1930 - தேவதாசி ஒழிப்பு மசோதா கொண்டுவருதல்**
- **1947 - தேவதாசி ஒழிப்பு சட்டம் (ஓமந்தூர் ராமசாமி ரெட்டி)**
- **1956 - பத்ம பூஷன் விருது**

## பண்டித அசலாம்பிகையார்

- **பிறப்பு** : 1875
- **இடம்** : இரட்டனை (திண்டிவனம் தாலுக்கா)
- இந்திய விடுதலைப் போராட்டமானது காந்தியடிகளின் தலைமையிலான அகிம்சை வழிப்போராட்டம். காந்திபுராணம் பாடி விடுதலைப் போருக்கு ஊட்டமூட்டியவர் பண்டித அசலாம்பிகையார்.
- அந்தணர் குலத்தை சேர்ந்தவர். சிறுவயதிலேயே கணவரை இழந்தார்.

- அசலாம்பிகை தமிழும், வடமொழியும் கற்றார். கவி பாடும் வன்மையும், பேச்சாற்றலும் பெற்று தேசிய இயக்கத்தில் பங்கு கொண்டு அரசியல் கூட்டங்களில் சொற்பொழிவாற்றினார்.

**காந்திபுராணம்**

- காந்தி புராண நூல் முன்னுரையில் **"தேசம் விடுதலைப் பெற்று இந்து சமூகம் உயர்வுற இறைவன் திருவருள் எய்துவானாக"** என்று கூறியுள்ளார்.
- நீதிமன்றத்தில் குற்றவாளிக் கூண்டில் காந்தியடிகள் விசாரிக்கப்பட்ட, வரலாற்று சிறப்பு மிக்க வாக்குமூலத்தை 310 வரிகளுக்கு மேல் பாடலாக அமைத்துள்ளார்.
- காந்திபுராணம் எட்டுக் காண்டங்களை உள்ளடக்கியது மொத்தம் 2034 பாடல்களைக் கொண்டது.
- அசலாம்பிகை அம்மையார் தமிழ்த் தென்றல் திரு.வி.க அவர்களிடம் தோழமை கொண்டு பல மாநாடுகளிலும், பொதுக்கூட்டங்களிலும் பங்கு பெற்றுச் சொற்பொழிவாற்றியுள்ளார்.
- திரு.வி.க இவரை **"இக்கால ஔவையார்"** என பாராட்டியுள்ளார்.

## ருக்மணி லட்சுமிபதி

- **பிறப்பு :** டிசம்பர் 6, 1983
- **இடம்** : சென்னை
- வரலாறு படைத்த விடுதலைப் போர் வீராங்கனை.
- ருக்மணியின் கணவர் டாக்டர் லட்சுமிபதி சிறந்த தேசியவாதி. உப்பு வரியை எதிர்க்கும் வகையில் தனது வீட்டுச் சமையலில் உப்பை அறவே புறக்கணித்தார்.
- சமுக சேவை மூலம் அரசியலில் நுழைந்தார்.
- 1927 ஆம் ஆண்டு சென்னையில் நடைபெற்ற 42 ஆவது காங்கிரஸ் மாநாட்டில் காங்கிரஸ் கட்சியின் மாதர் பிரிவுக்கு ருக்மணி லட்சுமிபதி தேர்ந்தெடுக்கப்பட்டார். இந்த மாநாட்டில் காந்தியடிகள், ஜவஹர்லால் நேரு ஆகியோர் கலந்து கொண்டனர்.
- 1929 ல் பாரிசில் நடைபெற்ற உலகப் பெண்கள் மாநாட்டில் இந்திய பிரதிநிதியாக கலந்து கொண்டார். அங்கு இந்திய விடுதலையின் அவசியம் பற்றி தனது பேச்சில் வற்புறுத்தினார்.
- 1930 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 12ம் தேதி காந்தியடிகள் உப்புச் சத்தியாகிரகம் நடந்த போது தமிழ்நாட்டிலும் ராஜாஜி தலைமையில் திருச்சியிலிருந்து 98 சத்தியாகிரகிகள் வேதாரண்யத்தை நோக்கி யாத்திரை தொடங்கினார்கள்.
- இதில் கலந்து கொண்ட திருமதி ருக்மணி லட்சுமிபதியையும், தாயம்மாளையும் கைது செய்து போலீசார் இழுத்துச் சென்றனர். ருக்மணி கைது செய்யப்பட்டு ஒரு வருட சிறைதண்டனை விதிக்கப்பட்டது.
- உப்பு சத்தியாகிரகப் போராட்டத்தில் நாட்டிலேயே முதன்முதலில் கைது செய்யப்பட்ட பெண்மணி திருமதி. ருக்மணி லட்சுமிபதி தீண்டாமை எதிர்ப்புப் பிரச்சாரத்தில் காந்தியடிகளிடம் ஹரிஜன மேம்பாட்டு நிதிக்காக தான் அணிந்திருந்த தங்க நகைகளை எல்லாம் கழற்றி வழங்கினார்.
- 1942 ல் வெள்ளையனே வெளியேறு இயக்கம் நடைபெற்ற போது காந்தியடிகள் உள்பட பல தேசிய தலைவர்கள் கைது செய்யப்பட்டதைக் கண்டித்து ருக்மணி லட்சுமிபதி கூட்டங்களில் பேசினார்.
- 1943 ம் ஆண்டு திருமதி ருக்மணி லட்சுமிபதி தலைமையில் நடைபெற்ற மாகாண அரசியல் மாநாட்டில் வெள்ளையனே வெளியேறு என்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. நாட்டின் விடுதலைக்கு அருந்தொண்டாற்றிய திருமதி. ருக்மணி லட்சுமிபதி 1951 இல் மறைந்தார்.

## வை.மு.கோதைநாயகி அம்மாள்

**பிறப்பு :** டிசம்பர்1, 1901

- **இடம்** : சென்னை
- கோதைநாயகியின் தந்தை வீடு மகாகவி பாரதியாரின் எதிர்வீட்டு வரிசையில் இருந்தது.

- சுதேசமித்திரன் பத்திரிக்கையில் துணை ஆசிரியராக இருந்தார்.
- கோதைநாயகி பாரதியாருக்கு தன் மகளை அறிமுகப்படுத்தினார். தான் பாடுவதை பாடி காட்டுகிறாயா என கோதை நாயகியிடம் கேட்கவே “ஜெயபேரிகை கொட்டா” என ஆவேசத்துடன் பாடத் தொடங்கிவிட்டார்.
- அக்காலத்தில் கோதைநாயகி தான் பாரதியின் பாடல்களைப் பரப்பிய முன்னோடி பெண்மணி. கோதை நாயகியின் கணவர் பார்த்தசாரதி.
- 1919 ஏப்ரலில் நடைபெற்ற ஜாலியன் வாலாபாக் படுகொலையை கேள்விப்பட்ட பார்த்தசாரதியின் உள்ளம் கொதித்தது. அன்றே தான் அணிந்திருந்த அந்நியத் துணிகளை அள்ளிவந்து தெருவில் போட்டு தூய கதராடை அணிய ஆரம்பித்தார்கள்.
- கோதைநாயகி மேடைகளில் பேச ஆரம்பித்தார். அதன்பின் பல ஊர்களிலும் பேசத் தொடங்கினார். வேலூரில் ராஜாஜி கலந்துகொண்ட கூட்டத்தில் பேசிய கோதைநாயகியின் சொல்லாற்றலைக் கண்டு நான் போகும் இடமெல்லாம் நீ வந்து பேசவேண்டும் என கட்டளையிட்டார்.
- 1931 ம் ஆண்டு சென்னையில் நடைபெற்ற கள்ளுக்கடை மறியலில் கோதைநாயகி பங்கேற்றார்.
- 1932 இல் ஆங்கில ஆட்சியை தவிர்த்து சென்னையில் ஊர்வலம் நடைபெற்றது. **“வந்தே மாதரம்”** என்ற முழக்கத்துடன் புறப்பட்ட ஊர்வலத்தில் கோதைநாயகி உணர்ச்சிபொங்க தேசிய பாடல்களைப் பாடினார்.
- ஊர்வலத்தில் கலந்துகொண்ட முக்கியமான பலருக்கு 6 மாதம் சிறைதண்டனை வழங்கப்பட்டது. கோதைநாயகி வேலூர் சிறையில் அடைக்கப்பட்டார். சிறையில் அவர் **“சோதனையின் கொடுமை”**, **“உத்தமசீலன்”** என இரு நாவல்களை எழுதினார்.
- சிறைவாழ்வு முடிந்து வெளியே வந்ததும் நாடு விடுதலைப் பெற்ற பின்பு மகாத்மாவின் பெயரால் “மகாத்மாஜி சேவா சங்கம்” எனும் அமைப்பை நடத்திவந்தார்.

## கே.பி.சுந்தராம்பாள்

- **பிறப்பு** : 1908
- **இடம்** : கொடுமுடி
- மேடையில் தேசிய பாடல்களைப் பாடி விடுதலை உணர்வை மேடையில் தூண்டிய, ஏழ்மை காரணமாக இரயிலில் சென்று அதில் பயணம் செய்வோரிடம் பாடிப் பொருள் பெற்று வாழ்ந்தார்.
- சிறப்பு நாடகங்களில் நடிப்பதற்காக சுந்தராம்பாள் இலங்கைச் சென்றார்.
- **“வள்ளி திருமணம்”** நாடகம் மூலம் புகழ்பெற்றார். நந்தனார் எனும் திரைப்படம் இவர் வாழ்வில் திருப்புமுனையாக இருந்தது.
- சுந்தராம்பாள் தன் கணவர் கிட்டப்பாவின் அண்ணனிடம் சங்கீதம் பயின்றார்.
- கணவர் மறைவுக்குப்பின் துறவி போன்று தன் வாழ்க்கையை அமைத்துக்கொண்டார்.
- தேசிய உணர்வு பெற்ற சுந்தராம்பாள் விடுதலைவீரர் சத்தியமூர்த்தியிடம் பற்றுகொண்டு அவர் பேசிய கூட்டங்களில் எல்லாம் தேசியப் பாடல்களைப் பாடி விடுதலை உணர்ச்சியையும், எழுச்சியையும் ஏற்படுத்தினார்.
- 1930 இல் மகாத்மா சிறைபட்டபோது நாட்டின் பல பகுதிகளிலும் சென்று தேசிய உணர்ச்சியூட்டும் பாடல்களால் மக்களின் தேசிய உணர்ச்சியை தட்டி எழுப்பினார்.

## நீலாவதி இராம சுப்பிரமணியம்

- **பிறப்பு** : ஜனவரி 23,1913
- இவரது திருமணத்தை பெரியார் முன்னின்று நடத்தி வைத்தார். இது கலப்புத் திருமணமாகும்.
- 1933 ம் ஆண்டு காந்தியடிகள் திருச்சிக்கு வந்தபோது நீலாவதி அம்மையார் அவரை சந்தித்து தான் செய்து வந்த சமூக சீர்திருத்த சேவைப் பற்றி சொன்னார்.

- அதைக் கேட்ட காந்திஜி நாட்டு மக்களுக்கு முதலில் சமூக சீர்த்திருத்தம் அவசியம் என்றார். நாட்டு விடுதலைக்காகப் போராடுவது அவசியமும் அவசரமும் ஆகும். அதன் கூடவே சீர்த்திருத்தப் பிரச்சாரம் செய்யலாம் என்று காந்தியடிகள் நீலாவதி அம்மையாருக்கு யோசனை கூறினார்.
- நீலாவதி சிறந்த மேடைப் பேச்சாளர். பாரதியாரின் பெண்விடுதலைப் பற்றியும் சுதந்திர இந்தியா பற்றியும் இவர் பேச்சை வ.உ.சி. அவர்கள் மிகவும் பாராட்டினர்.
- 1940 ல் சென்னை மாவட்ட மாதர் காங்கிரஸ் தலைவராக பொறுப்பேற்று தேசவிடுதலைக்காக தீவிர பிரச்சாரம் செய்தார். 1941 ல் நடைபெற்ற தனிநபர் சத்தியாகிரகத்தில் பங்கேற்று ராஜத்துரோகக் குற்றம் சாட்டி கைது செய்யப்பட்டு 4 மாதம் கடுங்காவல் சிறைதண்டனையும் ரூ. 250 அபராதமும் விதிக்கபட்டது.

## கேப்டன் இலட்சுமி

- **பிறப்பு** : அக்டோபர் 24, 1914
- இந்திய விடுதலைப் போரில் ஒரு புரட்சி வீராங்கனையாக திகழ்ந்தார் கேப்டன் இலட்சுமி.
- மருத்துவத்துறையில் சிறப்பு தேர்வு பெற்று சிங்கப்பூரில் டாக்டர் தொழில் மேற்கொண்டார்.
- அந்த சமயத்தில் இராணுவத் தளபதி மோகன் கிங் என்பவரால் "**இந்திய தேசிய ராணுவம்**" தொடங்கப்பட்டது.
- இராணுவத்தினர் அல்லாதவர்களுக்கென இந்திய சுதந்திரக்கழகம் அமைப்பு செயல்பட்டு அதில் இலட்சுமி சேர்ந்தார்.
- சிங்கப்பூருக்கு வந்த அகதிகளை பராமரிக்கும் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டது. இத்துடன் இந்திய சுதந்திரக் கழக பிரச்சாரப் பணியிலும் ஈடுபடுத்திக்கொண்டார்.
- அந்த சமயத்தில் ஜெர்மனியிலிருந்து இந்திய சுதந்திரத்திற்காக நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் குரல் கொடுத்து கொண்டிருந்தார்.
- சிங்கப்பூரில் நடந்த கூட்டத்தில் நேதாஜியின் வீரஉரை இலட்சுமியின் மனதிற்குள் மின் அதிர்வை ஏற்படுத்தியது.
- நேதாஜியை சந்திக்க விருப்பம் கொண்டு அவரை சந்தித்தார். விடுதலைப் போராட்டத்தில் பெண்கள் பங்குபெற வேண்டிய அவசியம் குறித்து சொன்னார்.
- இந்திய தேசிய ராணுவத்தில் ராணி ஜான்சி ரெஜிமெண்ட் எனும் பிரிவைத் தொடங்குவதற்கு இந்த சந்திப்பு அவசியமாக தேர்ந்தெடுக்கப்பட்டு இலட்சுமியின் தலைமையில் அடிப்படைப்பயிற்சியும், கடுமையான ஆயுதப் பயிற்சியும் கொடுக்கப்பட்டது.
- துப்பாக்கியில் சுடவும் எறிகுண்டுகளை வீசவும் பயிற்சி பெற்றார்கள். 1943 ம் ஆண்டு நேதாஜி ஆசாத் ஹிந்த் (சுதந்திர இந்தியா) அமைச்சரவையை அமைத்தார்.
- அதில் கேப்டன் இலட்சுமி மகளிர் நலத்துறை அமைச்சர், அமைச்சரவை வெள்ளையருக்கு எதிராக போர் பிரகடனப்படுத்தியது.
- பருவநிலை மோசமடைந்த நிலையில் நேதாஜி ஜான்சி படையை சிங்கப்பூருக்கு திரும்ப சொன்னார். ஆனால் கேப்டன் இலட்சுமி திரும்பவில்லை. ஆனால் அடர்ந்த காட்டுப் பகுதியில் மருத்துவமனையை உருவாக்கி இராணி வீரர்களுக்கு சிகிச்சை அளித்தார். பிரிட்டிஷ் ராணுவத்திற்கு தெரியவர கேப்டன் இலட்சுமியை கைது செய்து நாடுகடத்தி இந்தியா அழைத்துவந்தனர்.

## பெரியார் குடும்பத்துப் பெண்கள்

- பெரியார் ஈ.வெ.ராமசாமி அவர்கள் ஒரு காலத்தில் தீவிர காங்கிரஸ்காரராக இருந்தவர்.
- காந்தியடிகளின் நிர்மானத் திட்டங்களை நிறைவேற்றுவதில் முனைப்புடன் செயல்பட்டவர்.
- கதர்மூட்டைகளை சுமந்து வெயில் மழை என்று பாராமல் விற்பனை செய்தனர்.
- ஈ.வெ.ரா தன் மனைவி நாகம்மையார், சகோதரி கண்ணம்மா, தாயார் அனைவரையும் கதர் அணிய செய்ததுடன், மனைவி நாகம்மை, தங்கை கண்ணம்மாளுடன் 144 தடை சட்டத்தை மீறி கள்ளுக்கடை மறியலை நடத்தினார்.

- ஒருவருடம் ஈ.வெ.ராவுக்கு சிறைதண்டனை விதிக்கப்பட்டது. காந்திஜியிடம் பத்திரிக்கையாளர்கள் கள்ளுக்கடை மறியலை நிறுத்திவிட்டு வேறு நடவடிக்கைகளில் ஈடுபடலாமா எனக் கேட்டதற்கு, "அது என் கையில் இல்லை. ஈரோட்டில் உள்ள இரண்டு பெண்களின் கையில் உள்ளது. அவர்களிடம் தான் கேட்க வேண்டும்." (நாகம்மையார்,கண்ணம்மா) விடுதலைப் போரில் ஈடுபட்ட இந்த வீரமகளிரின் கொள்கைப் பிடிப்பு காந்திஜியையே வியக்க வைத்தது.

## கோவிந்தம்மாள் அய்யாமுத்து

- தமிழ்நாட்டில் கதர் இயக்கம் பணிக்கென்றே தன்னை அர்பணித்துக் கொண்டவர். "**கதர் என்றால் அய்யாமுத்து - அய்யாமுத்து என்றால் கதர்**" என்று மூதறிஞர் இராஜாஜி இவரைப் பற்றி கூறியுள்ளார்.
- முழு நேர கதர் பணிக்கு அர்பணித்துக் கொண்ட அய்யாமுத்துவை மனைவி கோவிந்தம்மா சட்டமறுப்பில் கலந்து கொள்ள அனுமதிக்காமல் தான் கலந்து கொண்டு சிறை சென்ற வீரப்பெண்மணி.

## திருமதி பத்மாவதி ஆஷர்

- கோவை பி.டி ஆஷரின் மனைவி 1930ம் ஆண்டு உப்பு சத்தியாகிரகத்திலும் 1932 ல் சட்டமறுப்பு இயக்கத்திலும் பங்கு பெற்று சிறை தண்டனை அனுபவித்தார்.
- இதே போல் சாவித்திரி அம்மாள், திருமதி அலமேலு, திருமதி அம்மணி அம்மாள், திருமதி. பாக்கியலட்சுமி, கோபிசெட்டிபாளையம் ஜெயலட்சுமி, உடுமலைப்பேட்டை ஜானகியம்மாள், கூகலூர் காளியம்மாள்,கோவை கமலம்மாள், கோவை குட்டியம்மாள், கோபிலட்சுமி மருதையம்மாள், திருப்பூர் லட்சுமி அம்மாள், சத்தியமங்கலம் முத்துலட்சுமி, அவினாசி சோனாபாய், திருப்பூர் சுமித்ரா அம்மாள், கோவை சுந்தராம்மாள், துடியலூர் தாயம்மாள், சரஸ்வதி பாண்டுரங்கம், கேப்டன் லட்சுமியின் தாயார் அம்மு சுவாமிநாதன், அனுசூயா, எம்.எஸ்.பாலாம்மாள்.
- சென்னை ஆர்.ஜானகி அம்மாள், ஏ.சி. ஜெயலட்சுமி, கமலாபாய், காமாட்சி அம்மாள், கமலாதேவி, லட்சுமி பாரதி, லீலாஜமத்கினி, லட்சுமி, மஞ்சுபாஷினி, ஏ.லட்சுமி, மாயாஜோசப், பூர்ணதிலகம்மாள், ராஜம்பாரதி, ராஜேஸ்வரிபாய், ரத்தினம்மாள், என்.எஸ்.ருக்மணி அம்மாள், சகுந்தலா, சீதாலட்சுமி, குமாரசாமி, சிவலோகம்மாள், கசீலா, தானு அம்மா, தாயரம்மா போன்ற பெண்கள் இந்திய விடுதலைக்காக காந்தியடிகள் அறிவித்த தனிநபர் சத்தியாகிரகப் போராட்டம், சட்ட மறுப்பு இயக்கம், வெள்ளையனே வெளியேறு, கள்ளுக்கடை மறியல் போன்ற பல்வேறு போராட்டங்களில் ஈடுபட்டு பலமுறை சிறை தண்டனைகளை அனுபவித்தனர்.
- இந்திய விடுதலைப் போராட்டத்தில் இன்னும் தமிழக மகளிர்களின் பங்கு மீனா கிருஷ்ணசாமி, திருக்கொண்டரி லட்சுமி அம்மாள், முத்தம்மாள், விசாலாட்சி, திண்டுக்கல் திருமகள், கே.பி.ஜானகியம்மாள் ராஜபாளையம் மஞ்சம்மாள், கடலூர் அஞ்சலையம்மாள் கடையம் சகோதரிகள் என நீண்டு கொண்டே செல்கிறது. இந்திய விடுதலைப் போராட்டத்தின் வீரமிக்க மங்கயைர் திலகங்களாக திகழ்ந்தனர்.

## பெண்கள் இயக்கங்கள்

- இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் சென்னை மாகாணத்தில் பெண்களை வலிமையுள்ளவர்களாக மாற்றுதல் எனும் நோக்கத்துடன் பல பெண்ணிய இயக்கங்கள் நிறுவப்பெற்றன.
- அவைகளுள் தமிழ் நாட்டில் உருவான இந்தியப் பெண்கள் சங்கம்(Women's India Association - WIA) அகில இந்தியப் பெண்கள் மாநாடு (All India Women's Conference - ALWC) ஆகியவை முக்கியமானவையாகும்.
- **இந்தியப் பெண்கள் சங்கம் (WIA)** என்பது 1917 இல் அன்னிபெசன்ட், டோரதி ஜினராஜதாசா, மார்கரெட் கசின்ஸ் ஆகியோர்களால் சென்னை அடையாறு பகுதியில் தொடங்கப் பெற்றது.

- இவ்வமைப்பு தனிநபர் சுகாதாரம், திருமணச் சட்டங்கள், வாக்குரிமை, குழந்தை வளர்ப்பு மற்றும் பொது வாழ்வில் துண்டுப்பிரச்சுரங்களையும் செய்தி மடல்களையும் வெளியிட்டன.
- இதே சமயத்தில் இந்தியப் பெண்கள் சங்கம், பெண்கல்வி குறித்த பிரச்சனைகளைக் கையாள்வதற்காக **1927இல் அகில இந்திய பெண்கள் மாநாட்டை நிறுவியது.**
- மேலும் அரசு பெண்களின் மேம்பாட்டிற்காகப் பல கொள்கைகளை நடைமுறைப்படுத்த வேண்டுமெனப் பரிந்துரை செய்தது.
- பெண்களின் விடுதலை என்பது சுயமரியாதை இயக்கத்தின் முக்கிய நோக்கங்களில் ஒன்றாகும். பெரியாரின் தலைமையிலான சுயமரியாதை இயக்கத்தைச் சேர்ந்தோர், பாலின சமத்துவம் மற்றும் பாலினம் குறித்த சமூகத்தின் உணர்வுகளை மேம்படுத்துதல் ஆகியவற்றுக்காகப் பணியாற்றினர்.
- தங்களுடைய கருத்துகளைப் பங்கிட்டு கொள்வதற்கான ஒரு இடத்தை பெண்களுக்கு இவ்வியக்கம் ஏற்படுத்திக் கொடுத்தது. இவ்வியக்கத்தில் தீவிரமாகப் பணியாற்றிய பெண்கள் பலர் இருந்தனர்.
- முத்துலட்சுமி அம்மையார், நாகம்மை, கண்ணம்மா, நீலாவதி மூவலூர் இராமாமிர்தம், ருக்மணி அம்மாள் அலமேலு மங்கை தாயாரம்மாள், நீலாம்பிகை மற்றும் சிவகாமி சிதம்பரனார் ஆகியோர் அவர்களுள் முக்கியமானவர்கள் ஆவர்.
- கடவுளுக்கு இறைப்பணி செய்யும் சேவகர்களாக இளம் பெண்களை இந்து கோவில்களுக்கு அர்ப்பணிக்கும் வழக்கம் **தேவதாசி** என்று அறியப்பட்டனர்.
- கடவுளுக்கு செய்யப்படும் சேவை எனும் நோக்கில் அமைந்திருந்தாலும் நாளடைவில் இம்முறை பெரும் ஒழுக்கக்கேட்டிற்கும் பெண்களைத் தவறாகப் பயன்படுத்துவதற்கும் இட்டுச்சென்றது.
- 1930இல் சென்னை சட்டமன்றத்தில் முத்துலட்சுமி அம்மையார் சென்னை மாகாணத்தில் இந்து கோவில்களுக்குப் பெண்கள் அர்ப்பணிக்கப்படுவதை தடுப்பது எனும் மசோதாவை அறிமுகப்படுத்தினார்.
- இத்தேவதாசி முறையை ஒழிப்பதற்காகச் சட்டம் இயற்றப்பட வேண்டும் என்பதற்காக நடைபெற்ற இயக்கத்தில் டாக்டர். முத்துலட்சுமி அம்மையார் முதலிடம் வகித்தார். **'மதராஸ் (அர்பணிப்பைத் தடுத்தல்) தேவதாசி சட்டம் 1947'** எனும் சட்டம் அரசால் இயற்றப்பட்டது.
- பின்னர் தேவதாசி ஒழிப்புச் சட்டமாக மாறிய இம் மசோதா, இந்து கோவில் வளாகங்களிலோ அல்லது வேறு வழிபாட்டு இடங்களிலோ **"பொட்டுக் கட்டும் சடங்கு"** நடத்துவது சட்டத்திற்குப் புறம்பானதாகும் என அறிவித்தது.
- தேவதாசிகள் திருமணம் செய்து கொள்வதற்கு சட்டபூர்வமான அனுமதியை வழங்கியது. மேலும் தேவதாசி முறைக்கு உதவிசெய்கிற தூண்டிவிடுகிற குற்றத்தை செய்வோர்க்கு குறைந்த பட்சம் ஐந்தாண்டு சிறை தண்டனை என ஆணையிட்டது. இம்மசோதா சட்டமாக மாறுவதற்கு 15 ஆண்டுகள் காத்திருந்தது.

**மாதிரி வினாத்தாள்**

1. பின்வருவனவற்றுள் தமிழகத்தின் எந்த பகுதியில் "காங்கேய மாடுகளின்" உருவம் பொறித்த சேர நாணயங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது?

 A. புதுச்சேரி B. கொடுமணல் C. கரூர் D. அழகன் குளம் E. விடை தெரியவில்லை

2. பின்வரும் கூற்றுகளில் தவறானவற்றைத் தேர்ந்தெடுக்கவும்.
 1. இராஜாஜியின் ஆட்சிக் காலத்தில் (1946 - 47) இந்தியை கட்டாயப் பாடமாக்குவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டது.
 2. அன்றைய இந்தி எதிர்ப்பு போராட்டத்தின் தளபதியாக அண்ணாதுரை தேர்வு செய்யப்பட்டார்.
 3. 1996 இல் மெட்ராஸ் என்பது சென்னை என பெயர் மாற்றம் செய்யப்பட்டது.

 A. 1 மட்டும் B. 2 மட்டும் C. 1 மற்றும் 3 D. அனைத்தும் E. விடை தெரியவில்லை

3. பொருத்துக:

| கோவில் | கட்டியவர் |
|---|---|
| a. மண்டகப்பட்டு மும்மூர்த்தி கோவில் | - 1. இரண்டாம் நந்திவர்மன் |
| b. வைகுந்த பெருமாள் கோவில் | - 2. ராஜாதி ராஜன் |
| c. கூரம் கேசவ பெருமாள் கோவில் | - 3. முதலாம் மகேந்திரவர்மன் |
| d. செயங்கொண்ட சோழிச்சுரம் கோவில் | - 4. மூன்றாம் குலோத்துங்க சோழன் |
| e. திருபுவனம் கம்பகேசுவரர் கோவில் | - 5. முதலாம் குலோத்துங்க சோழன் |
| f. கும்பகோணம் சூரியனார் கோவில் | - 6. இரண்டாம் பரமேஷ்வரன் |

 A. 1 2 3 4 6 5 B. 3 6 1 2 4 5 C. 3 6 2 5 1 4 D. 4 3 5 2 1 6

 E. விடை தெரியவில்லை

4. இரண்டாவது உலக தமிழ் மாநாடு சென்னையில் எப்போது நடைபெற்றது?

 A. 1967 பிப்ரவரி 6 B. 1968 ஜனவரி 3 C. 1968 ஜனவரி 23 D. 1968 ஜனவரி 14

 E. விடை தெரியவில்லை.

5. குமரகுருபரரின் நூல்களில் தவறானவற்றைத் தேர்வு செய்க:

 A. கந்தர் கலிவெண்பா B. வேதியர் ஒழுக்கம் C. நீதிநெறி விளக்கம்

 D. சகலகலா வல்லி மாலை E. விடை தெரியவில்லை

6. 'சூழ்ந்து மாமயிலாடி நாடகம் துளுக்குறுத்தனவே' - இடம் பெற்றுள்ள காப்பியம்?

 A. மணிமேகலை B. சிலப்பதிகாரம் C. சீவகசிந்தாமணி D. குண்டலகேசி

 E. விடை தெரியவில்லை

7. சூரிய ஒளி பெறாத செடியும், பகுத்தறிவு ஒளிபெறாத சமுதாயமும் வளர்ச்சி அடையாது என உணர்ந்தவர்:

 A. பாரதி B. பெரியார் C. அம்பேத்கர் D. பாரதிதாசன் E. விடை தெரியவில்லை

8. தமிழக மக்களால் காந்தியக் கவிஞர் என வழங்கப்படுபவர்:

A. திரு.வி.க B. வெ. இராமலிங்கனார் C. பாரதிதாசன் D. வே. இராமசாமி

E. விடை தெரியவில்லை

9. தமிழர் வளர்த்த நுண்கலைகளில் முன்னணியில் நிற்கும் கலை.

A. பேச்சுக்கலை B. ஓவியக்கலை C. சிற்பக்கலை D. கட்டிடக்கலை

E. விடை தெரியவில்லை

10. தமிழ்வேலி என்று மதுரைத் தமிழ் சங்கத்தினைக் கூறிய நூல்

A. பரிபாடல் B. புறநானூறு C. திருவாசகம் D. தேவாரம் E. விடை தெரியவில்லை

11. கீழ்ச்சாதி, மேல்சாதி வேற்றுமை, தீண்டாமை கொலைகள் அகல எல்லோருக்கும் கல்வி தேவை என்று கூறியவர்?

A. அம்பேத்கர் B. அயோத்திதாச பண்டிதர் C. பெரியார் D. காந்தியடிகள்

E. விடை தெரியவில்லை

12. அண்ணாதுரையை நீதிக்கட்சியின் மூளை என்றவர்?

A. பெரியார் B. வரதராஜீலு நாயுடு C. ராஜாஜி D. காமராசர் E. விடை தெரியவில்லை

13. ருக்மணி தேவி அருண்டேலின் பிரபலமான நாடக நாட்டியங்களில் தவறானது.

A. சீத்தா சுயம்வரம் B. சபரி மோச்சம் C. குமார சம்பவம் D. ராஜ முத்திரை

E. விடை தெரியவில்லை

14. பொருத்துக:

a. குறிஞ்சி நில விழா - 1. குன்றக்குரவை

b. முல்லை நில விழா - 2. ஆய்ச்சியர் குரவை

c. மருத நில விழா - 3. தீவகச் சாந்தி

d. நெய்தல் நில விழா - 4. முந்நீர் விழா

A. 4 2 1 3 B. 3 1 2 4 C. 4 1 2 3 D. 1 2 3 4 E. விடை தெரியவில்லை

15. கோவில்களில் நான்கு புறங்களிலும் நான்கு கோபுரங்கள் எழுப்பப் பெறும் மரபு யார் காலத்தில் தொடங்கியது?

A. இரண்டாம் குலோத்துங்கன் B. முதலாம் ராஜராஜ சோழன் C. முதலாம் ராஜேந்திரன்

D. முதலாம் குலோத்துங்கன் E. விடை தெரியவில்லை

16. பட்டி எனும் சொல்லினைக் கொண்ட ஊர்களுடன் தொடர்புடைய நிலப்பகுதி?

A. குறிஞ்சி B. முல்லை C. மருதம் D. நெய்தல் E. விடை தெரியவில்லை

17. தேனிலே ஊறிய செந்தமிழின் - சுவை

தேரும் சிலப்பதிகாரம் என்று பாராட்டியவர்.

A. பாரதிதாசன் B. பாரதியார் C. சுரதா D. கவிமணி தேசிய விநாயகம் பிள்ளை

E. விடை தெரியவில்லை

18. இசைக்கருவிகளைப் பற்றிய கூற்றுகளில் தவறானது:
    1. தமிழர்கள் போர்த்துணையாகக் கொண்ட கருவிகளுள் முதன்மையானது முரசு ஆகும். மாக்கண் முரசைப் பற்றி புறநானூறு குறிப்பிடுகிறது.
    2. உடுக்கை என்பது இடை சுருங்கிய ஒரு கைப்பறை ஆகும். உடுக்கையைப் பற்றி தேவாரத்தில் கூறப்பட்டுள்ளது.
    3. பலா மரத்தினால் செய்யப்பட்டு விலங்குத் தோலினால் கட்டப்படும் கருவி திமிலை ஆகும். சங்கொடு தாரை காளம் என்று திமிலை பெரியபுராணத்தில் இடம்பெற்றள்ளது.
    4. தோல் கருவிகளில் முதன்மையான கருவி பறை. இது தோல் கருவிகளின் தாயாக விளங்குகிறது.

A. 1 மட்டும் B. 2, 3 C. 1, 4 D. 1, 2, 3 E. விடை தெரியவில்லை

19. தவறான கூற்றைத் தேர்ந்தெடுத்து எழுதுக:
    1. ஓர் உருவத்தின் முன்புறம் மட்டும் தெரிந்தால் புடைப்பு சிற்பம்.
    2. ஓர் உருவத்தின் முன்புறம், பின்புறம் முழுவதும் தெரிந்தால் முழுஉருவச்சிற்பம்.
    3. கல்லினால் செய்யப்படும் சிற்பம் கற்சிற்பம்.
    4. உலோகத்தால் செய்யப்படும் சிற்பம் உலோகச் சிற்பம்.
    5. சங்ககாலத்தில் மரச்சிற்பங்கள் அமைக்கப்பட்டதை பரிபாடல் மூலம் அறியலாம்.

A. 1 மட்டும் B. 2 மட்டும் C. 4 மட்டும் D. அனைத்தும் E. விடை தெரியவில்லை

20. பின்வரும் கூற்றுகளில் சரியானதைத் தேர்ந்தெடுத்து எழுதுக:
    1. தொல்காப்பியத்தில் ஓவியம் பற்றிய செய்தி கூறப்பட்டுள்ளது.
    2. எழுத்து என்ற சொல்லுக்கு ஓவியம் என்றே பொருள் கொள்வர்.
    3. பாண்டியன் நெடுஞ்செழியன் அரண்மனையில் சித்திர மண்டபம் இருந்ததை நெடுநல்வாடையில் நக்கீரர் குறிப்பிடுகிறார்.
    4. மக்கள் கூட்டத்தை காட்டும் ஓவியம் பிரதிமை என அழைக்கப்படுகின்றன.
    5. தெய்வ வடிவங்களைக் காட்டும் ஓவியங்கள் படிமை எனப்படுகின்றன.

A. அனைத்தும் சரி B. 1, 3, 4 சரி 2, 5 தவறு C. 1, 2, 4 சரி 3, 5 தவறு

D. 1, 2, 3 சரி 4, 5 தவறு E. விடை தெரியவில்லை

## Answer Key

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | C | 6 | C | 11 | C | 16 | B |
| 2 | A | 7 | D | 12 | B | 17 | D |
| 3 | B | 8 | B | 13 | D | 18 | A |
| 4 | B | 9 | B | 14 | D | 19 | C |
| 5 | B | 10 | A | 15 | A | 20 | A |